தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு எண். 221.

அகத்தியர் 1200 - ல்

சதாசிவத் தியானம்

(மணி மந்திர மருந்து)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல்நிலையம்

1985] [விலை ரூ. 4—00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 221

அகஸ்தியர் 1200 - ல்

சதாசிவத் தியானம்

(மூலிகை, கற்பம், அஞ்சனம், சாலவித்தை)

பாடலும் — பொழிப்புரையும்

சிறப்புக் கேண்மை பதிப்பாசிரியர் :

தமிழக வரலாற்று அறிஞர், கல்வெட்டுக்கலைஞர் கணியனார்,

கரந்தை, பேராசிரியர். சி. கோவிந்தராசனார்

சிறப்பு ஆராய்ச்சியாளர்,

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலையம்

*

1985] [விலை ரூ. 4—00

முதற்பதிப்பு : 1985

வெளியீடு :

சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

பதிப்பகம் :

சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம்,

தஞ்சாவூர்.

வெளியிடுவோர் முன்னுரை

'அகத்தியர் 1200—ல் சதாசிவத் தியானம்' என்ற இந்நூல் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் வெளியீடாக வெளிவரும் மறைஞானக் கலைத்துறையின் முதல் நூலாகும். 'ஞானம்' — சான்றாண்மை நிலையினின்றும் சமுதாயப் பயன் பாட்டிற்கு வரும்போது உருவாகும் ஞானக் கிளை களுள் மறைஞானக் கலையும் ஒன்றெனலாம். மனிதன் தமது புலனாற்றலால் செயற்கரிய செய்யுந்திறன் மிக்கவன் என்பதனை இத்தகைய கலைப் படைப்புகள் புலப்படுத்துகின்றன.

'மணி, மந்திரம், மருந்து' என்ற மூன்றும் ஞானி கள் சமுதாயத்தின் மீது காட்டிய பரிவால் விளைந்த பயன்பாட்டு வாழ்வியல் நெறியாகும். இவற்றுள் மருந்து எல்லோர்க்கும், எல்லாக் காலத்திற்கும் பயன் தரத்தக்கதாதலின் விளங்கி வருகின்றது. ஆயின் மணியும், மந்திரமும் ஒரு சிலரிடையே மட்டும் பயிலப் படுகிறது. ஏனெனில் இவை எவ்வளவுக்கெவ்வளவு மனித சமுதாயத்திற்கு நல்லன செய்யமுடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு தீமையும் விளைக்கவல்லன. ஆதலின் இவை குறித்த செய்திகள் அவர்களுக்குள் ளாகவும் மறை பொருளனவாகவே கையாளப் படுகின்றன.

இத்தகு அரிய மறைஞானக் கலைப் படைப்பு ஒன்றினை இந்நூல் வடிவில் தமது ஞான முதிர்ச்சி யுடன் பேராசிரியர் திரு. சி. கோவிந்தராசனார் அவர்கள் எளிய நடையில் பதிப்பித்துள்ளார்கள்.

பாடகச்சேரி சுவாமிகள், திருவண்ணாமலை துந்தினா சுவாமிகள் போன்ற பெருஞ்ஞானிகளின் சீடராக இளமையில் பெற்ற சித்தக் கலைத் தேர்ச்சியால் இவ்வரிய நூலாக்கத்தினைத் தந்துள்ள அவர்கட்கு எம் நன்றி.

நடுவணரசும், தமிழகவரசும் மிகுந்த ஈடுபாட்டுடன் வழங்குகின்ற பொருளுதவியினைப் பயன்படுத்தி அரும்பெரும் நூல்களை அச்சிற்கொண்டு வருதலில் சிறப்புறப் பணியாற்றிவரும் இந்நூலக நிர்வாக அதிகாரி பொறுப்பிலுள்ள திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப். எஸ்சி., அவர்கட்கும், நூலகத்தார்க்கும், அச்சகத்தார்க்கும் நன்றி கூறி மகிழ்கிறேன்.

தஞ்சாவூர்,
30—9—85.

து. இரா. இராமசாமி, இ.ஆ.ப.,
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

முன்னுரை

உலகில் மானுடராய்ப் பிறந்து, முற்பிறவியில் செய்த நற்பயனாலும், பிறப்பின் உண்மை நிலை அறிதலாலும், முயற்சியாலும், ஞான யோக சித்து ஆகியவற்றில் சிறந்திருந்த சான்றோர்கள் பலராவர்.

அவர்களுள், தமிழகத்தில் நிலவிய சித்தர்கள் பலராயினும், பதினெண் சித்தர்களே வழக்கில் கூறப்பெற்றுள்ளனர். இவர்களால் அறியப் பெற்ற விஞ்சைகள் எண்ணிலாதனவாகும். அவற்றுள் மக்கள் நோய் தீர்க்கும் மருத்துவம், பிராணிகட்குப் பிணி தீர்க்கும் வாகடம் முதலானவற்றோடு, காலக்கணிப்பாகும் சோதிடம், மந்திரம் அதற்கமைந்த சக்கரம், வசியத்திற்கமைந்த குளிகை, திலகம், பஞ்சவரை அடக்க கற்பம், கரு, செயலேவு ஆகியவற்றிலும் தேர்ந்து தெளிந்து மக்களிடையே மதிப்புடன் இருந்துள்ளனர்.

சித்தும், சித்தர் வளர்த்த நெறிகளும்

மூச்சு நிலையை உணர்வாலறிந்து அதனைப் பயிற்சி வழி இயக்கும் ஆற்றல் படைத்தவன் யோகி. சிந்தனை வளர்ச்சியால், தன்னையும் சூழலையும், தலைவனையும் அறிவுத் தெளிவினால் உணர்ந்து புலனடக்கமுடனும் வாழ்வில் உயர்நோக்குடனும் செயல்படுபவன் ஞானி. பல சித்து வித்தைகளைக் கற்றுத்தேர்ந்து, மக்கள் மகிழவும், மருளவும் செய்துகாட்டித் தனி நிலையில் வாழ்ந்தவன் சித்தன்.

சித்துக்களில் வல்லோர் ஞானமும் யோகமும் அறிந்தவராகவும் இருந்துள்ளதனைப் போகர் ஏழாயிரம் என்னும் சாத்திரமும், பதினெண் சித்தர் பாடல்களும் நன்கு உணர்த்துகின்றன.

சித்து வித்தைக்கு, மூலிகைகள், வேர்கள், மலர்கள், நிலத்தில் விளையும் தாதுக்கள், கனிப் பொருள்கள், ஆகிய வற்றுடன் பல்வேறுபட்ட எச்சப்பொருள்களும் மூலப் பொருள்களாகும். அவற்றை முறைப்படி எடுத்துவந்து விதிப்படிச் சேர்த்து, அதனைக் குளிசம், அஞ்சனம், கற்பம், நீறு ஆகியவைகளாக ஆக்கிக்கொண்டு, அவற்றால் வசியம், கண்கட்டு, அற்புதம், தீங்கு ஆகிய செயல்களை நிகழ்த்து வது சித்தர் நெறிகளுள் ஒரு பகுதியாகும். பதினெண் சித்தருள், போகர், அகஸ்தியர், காக்கைபுனி, புலிப்பாணி, கோரக்கர், கும்பமுனி, தேரையர், கருவூரார், கமலமுனி, ஆகிய சித்தர்கள் குறிப்பிடத்தக்கவராவர். இம்மகான்கள் அருளுள்ளத்தோடு செய்தளித்துள்ள மருத்துவ நூல்கள் பலவாகும். இவர்கள், தமிழகத்தில், தமிழ் மொழியினை நன்கு கற்றுத் தேர்ந்த புலவர்களாகவும் இருந்துள்ளனர். சிலர் வான்நிலைக்காலக்கணியராகவிருந்து பல அரிய சோதிட நூல்களை ஆக்கித் தந்துள்ளனர். சித்து வித்தை களையும் பிறவாறமைந்த செயற்பாடுகளையும், யாவரும் கண்டு எளிதில் கையாளாவண்ணம், இலை மறைக்காய் போன்று பொருட்கரு பொதிந்த அருஞ்சொற்களாலான பாடல்களாகப் படைத்து வெளிப்படுத்தியுள்ளனர்.

சித்தர்களின் நெறிகளை இரண்டு வகையாகக் கொள் ளலாம். ஒன்று அருள்நெறி, மற்றொன்று மருள்நெறி- மாயம் மயக்குடன் பகையை மாய்க்கும் செயல்கள் மருள் நெறியின் பாற்படும். இதனைச் சித்தநெறிச் செயல்வழிப் பயிற்சி எனலாம். அருள்நெறிகளுள் ஒன்றாகிச் சிறந்த மருத்துவக்கலை நெறியுடன் இந்நெறியும் . காலவழக்கில் மூலச் சித்தர்களின் மரபுவழியென்ற சிந்தனையுடன் தொடர்ந்து நாடெங்கும் படர்ந்து வந்துள்ளது.

வடலூர் இராமலிங்க சுவாமிகளும், பாடகச்சேரி சுவாமிகள் என்னும் இராமலிங்க அடிகளாரும், சித்த மர பில் திகழ்ந்த சான்றோர்களாக இருந்துள்ளனர்.

இராமலிங்க சுவாமிகள் ஞான நெறியுடன் யோக சாதனையும் கூடிய தத்துவச் சித்தராக விளங்கியுள்ளார், பாடகச்சேரி சுவாமிகள், சித்து நெறியில் தேர்ந்தவராக இருந்தும், ஓரளவு அறிமுகம் செய்த நிலையில் சித்தி பெற்றுள்ளார். திருநெல்வேலி, பிரும்மஞானி சுந்தா சுவாமிகள் உயிர்ப்பித்தல் போன்ற சித்து அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்கள்.

பன்றிமலைச் சுவாமிகள், சத்தியசாயிபாபா போன்ற பெரியோர்கள் அற்புதங்கள் பல நிகழ்த்தி வருகின்றனர். நாட்டில், ஆங்காங்கே பெண்களிடத்தும் ஆண்களிடத்தும் சித்துநிலைத்தோன்றி, தெய்வ வழிபாட்டிலும், குறி சொல்லுதலிலும் அற்புதங்கள் நிகழ்ந்து வருவதனை அறிய முடிகின்றது. இவ்வாறெல்லாம் நாட்டில் ஒரு சிலர் ஈடுபட்டு இயங்கி வருவதெல்லாம் பண்டைய சித்த நெறியின் வழிவழித் தொடர்ச்சியென்றே கொள்ளலாகும்.

சித்தர் நூல்கள் :

சித்தர்கள் தாம் அரிதில் கண்டுணர்ந்த மருந்துகளையும் மந்திரவித்தைகளையும், கோள்நிலைக் கணிப்பினையும் உலகுக்கு அறிமுகம் செய்யும் அருள்நோக்குடன் சுவடிகளில் எழுதி வைத்தனர். மாணாக்கர்கட்கு நேரில் கற்பித்து அக்கலைகளை வளரச்செய்தனர். ஆதி சித்தர்களின் மரபினைத் தழுவிய நிலையில் கால வழக்கில் தோன்றிய சித்தர்களும் சித்துநெறி உணர்ந்தாரும் கண்டறிந்தவற்றை நூல்களாகச் செய்துள்ளனர். அவற்றைப் பற்றிய விளக்கம், செய்முறை பயன் ஆகியவற்றைப் பாடல்களாகவே செய்துள்ளனர். பாடல்களில் பயின்றுள்ள மொழிநிலை, பாமர வழக்குச் சொற்களாகவும், கொச்சைச் சொற்களாகவும், வேற்றுப் பொருள் பொதிந்த படைப்புச் சொற்களாகவும் இருக்கின்றன. மருத்துவம், சோதிடம், மந்திரம் ஆகிய நெறிகளில் கிடைத்துள்ள நூல்களில் பெரும்பான்மையான நூல்கள் இம்முறையிலேயே எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் திரிந்து

தேய்ந்த பாமர வழக்குச் சொற்களே மிகுதியாகக் கையாளப் பட்டுள்ளன.

இவ்வாறு நூல்கள் மொழிநிலையில் அமைந்துள்ளதற்குரிய காரணங்களை ஆராய்தல் இன்றியமையாததொன்றாம். தமிழ் மொழியில் தேர்ச்சிபெறாத நிலையில் சித்து நெறிகளில் தேர்ந்திருந்த சித்தர்கள், தாமறிந்த மொழி நிலையில் தாமே கற்பித்துக்கொண்ட பாடலமைப்பில் செய்திகளைச் சொல்லியுள்ளார்கள் என்பது ஒன்றாகும்.

மருத்துவம், மந்திரம் போன்ற முயற்சியால் நிகழ்த்தும் கலைகளை, வாழ்க்கையில் வளத்துடன் இருப்பவர்கள் எளிதில் ஏற்றுச் செயல்படுத்துதல் பொதுவாக இருப்பதில்லை. கல்வியிலும் செல்வத்திலும் உயர்ந்திருந்து கால நிலையில் வாழ்வின் நிலையாமையை உணர்ந்து துறவியான பட்டினத்தார் போன்றாருக்கும் ஒன்றிய கலைகளாக இல்லை.

பாமரரிடையே பழகும் பொது நலச்சிந்தனையாளர்கள் புரிந்துகொண்டு, நெறியறிந்து முறையுடன் மக்களுக்கு உதவும் நோக்குடனேயே பாமர மொழியில் பாடல்களாகச் செய்துள்ளனர் என்பதும் ஒன்றாம்.

மக்களிடையே பெருவழக்காகப் புழக்கத்தில் இருக்கும் அரியபொருள்கள் மதிப்பிழந்து எளிமையாகி விடுவது இயல்பாதலின், மருத்துவம், மந்திரம் ஆகியவை அந்நிலையை அடையாமல் இருக்கவும், பாமர மக்களுள் விருப்பமுடன் அரிதிற்றேடிக் கண்டு முயன்று செயல்படுத்தும் அருளுள்ளம் பெற்றாராலேயே இவை மக்கட்கு நெறிமுறைகளோடு பயன்படுத்தப் பெறும் என்ற நோக்காலும் நூல்கள் அமைக்கப்பட்டிருப்பதுவும் அறியத்தக்கதாகும்.

நூல்களின் பெயர் நுட்பம் :

பாமரத் தமிழ் நடையில் எழுதப்பெற்ற நூல்கள் பாமரருக்காகவே எழுதப்பட்ட நூல்கள் என மருத்துவ சோதிட நூல்களை வகையாக்கலாம். இம்முறைகளில்

ஆதி சித்தர்களாகிய அகத்தியர், புலிப்பாணி போன்றவர்களும் நூல்கள் செய்திருக்கலாகும். அவர்களின் சித்தநெறி மரபுவழி வந்த பிற்காலச்சித்தரும் அம்முறையிலேயே நூல்கள் பல செய்தளித்துள்ளனர்.

நூலின் மொழிநடை, செய்தி, குறிப்புகள் ஆகியவற்றைக் கொண்டு நூல் பிற்காலத்தது என்பதை அறிய முடிகின்றது. ஆனால் நூலில் சொல்லப்படும் அறிமுகவுரைகளும், நூலின் பெயரும் பண்டைய சித்தர் சொல்வதாகவும், அவர் பெயரால் ஆனதாகவும் காட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

பிற்காலத்தில் திகழ்ந்த சித்து நெறியாளர்கள் பின்பற்றியது பண்டைய சித்தர்களின் நெறியேயாகும். அவ்வழக்கு மதிப்பேற்றம் பெறுதற்கென்றே அவர்கள் பெயரால் நூலையும் நூன் முறைகளையும் குருவழிப்போற்றும் பணிவுடன் செய்தளித்துள்ளனர் என்பது விளங்கும். இம்முறையிலேதான் பல மருத்துவ நூல்களும் மந்திர சோதிட நூல்களும் வழக்கில் வந்துள்ளன. குறிப்பாக, புலிப்பாணி வைத்திய சிந்தாமணி, தேரையர் பால வைத்தியம், கும்பமுனி வாக்கியம், கோரக்கர் வாகடம் என்பன போன்ற பெயரமைந்த நூல்களைக் காட்டலாகும்.

அகஸ்தியர் ருத்திர தியானம்:

இந்நூல் அகத்தியர் நூன்முறைகளைத் தழுவிச் செய்யப்பட்டுள்ளது. அகத்தியர் 1200-ல் கண்ட தியானங்களில் சிலவற்றைத் தேர்ந்து தொகுத்துத் தரப்பெற்றுள்ள நூல், என்று பொதுவாக அறியத்தக்கதாக இருப்பினும் மூன்று சித்தர்களின் முறைகளில் ஒருசிலவற்றைத் தேர்ந்து தெளிந்து இந்நூலாசிரியர் தொகுத்தளித்துள்ளமைப் புலனாகின்றது.

1. அகத்தியர்—"இதனையெல்லாம் தெரியாமற்றான் அடக்கி வைத்தார் ஆயிரத்தில்" (பாடல்—1)

2. "இன்னமொரு வித்தை கேளு, நஞ்சுண்டார் எனக்குரைத்தார் நல்லவித்தை" (பாடல்—55)

3. "பொறுக்குமடா கமலத்தோன் பூட்டி வைத்த—வித்தை" (பாடல்—7)

என்ற பாடற் பகுதிகள் தரும் செய்திகளால், இந்நூல் அகத்தியர், நஞ்சுண்ட சித்தர், கமலமுனி ஆகிய சித்தர்களின் நெறிமுறைகளுள் தேர்ந்து தொகுக்கப்பட்டுள்ளதும் 62-பாடல்களாக ஆக்கப்பட்டுள்ளதுமாகிய நூல் என்பது தெளிவாம்.

நூலாசிரியர்:

நூலாசிரியரின் பெயர் இந்நூலில் காணப்படவில்லை இவர் நஞ்சுண்ட சித்தரின் மாணாக்கராகவோ, ஒரே காலத்தில் வாழ்ந்தவராகவோ இருந்துள்ளார். மருத்துவம் கற்றிருந்ததைவிட மந்திரம், குளிகை, வசியம், செய்வினை ஆகிய ருத்திர தியானங்களில் இவர் தேர்ந்தவரென்பது இவரது பாடல்கள் தரும் முறைகளால் அறிய முடிகின்றது. சித்துவித்தைகளைச் செய்துகாட்டும் பயிற்சியுடன் இந்நூலாசிரியர் சிறந்திருந்தாரென்பதனை,

"யான் பார்த்த வித்தையடா-உள்ளபடி உனக்குரைத்தேன்" என்ற பகுதியால் அறியமுடிகின்றது. நூலின் அமைப்பு மொழிநிலை, தரும் செய்திகள் ஆகியவற்றைக் கொண்டு இந்நூலாசிரியர் சித்தர் நெறியில் நின்ற சித்தாளர் என்று கூறலாம். இவர் பிற்காலத்தவர் என்ற அளவில் குறிக்கத்தக்கவராகவுள்ளார்.

பாடல் அமைப்பு:

விருத்த சந்தம். பாமர மொழிவழிச் சொற்கள், பாரடா, கேளடா, பாரு-என்ற முன்னிலை ஏவல் சொற்கள் பயின்றுள்ளன. அந்தாதித் தொடையாலமைந்த பாடல்கள் 62-பாடல்கள் நூலில் இடம்பெற்றுள்ளன.

அந்தாதியென்பது, ஒருபாட்டின் முடிபுச்சொல், அடுத்த பாட்டின் முதற்சொல்லாக அமையப் பாடுவதாகும். இம்மரபினை நூலாசிரியர் திறமையுடன் கையாண்டுள்ளார். பாடல்கள் விருத்தம் போல் நடைபெறினும், சொல்லவேண்டிய கருத்தடைவாகச் சில அடிகளில் சொற்கள் மிகுதி பெற்ற நிலையில் சந்த அடைவாகவே பாடியுள்ளார்.

மொழி - நிலை :

பாமர வழக்கிலும், வட்டார மொழி நிலையிலும், மாறியும், திரிந்தும், தேய்ந்தும், குறுகியும் வழங்கப்பெறும் தமிழ்ச்சொற்கள் பாடல்களில் யாங்கணும் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, கேளு, பாரு, மாட்டியோது, மானப்பாடி, பண்ணிவை, பேசுறேன், ஆசுறேன், முழுங்கலாச்சு, மளுங்கலாம், அப்பாலே போ, பெறுக்கும், காறடா, தோணும், வேணும், முளிக்கும், ராக்காலம், தொளிலாளி, முக்கு, பாளடா. களட்டுவாய், மாத்தம், மாத்தான், வயித்தியம், வருகும், என்ற ஒரு சில சொற்களைக் கட்டலாகும்.

உரை நிலை :

தந்திரச்சொற்களாகவும், மந்திரச் சொற்களாகவும், பொருள் மாற்றச் சொற்களாகவும் புனைந்து உணர்த்தியுள்ள இந்நூற்பாடல்களை முறைப்படுத்தி, சொற்களின் பதனறிந்து பொருள்கண்டு உரைசெய்வது அரிய செயலேயாகும். இதற்கு இந்நூல் போன்ற நூல்களில் நற்பயிற்சியும் அனுபவமும் இன்றியமையாததாகும்.

யான் இளமைக்காலத்தில், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் மாணாக்கனாக இருந்தபோது (கி.பி. 1938-40) சங்கத்தின் ஒருபகுதியாக இணைந்திருந்து மக்கள் பிணிதீர்க்கும் இலவச மருத்துவச்சாலையில் இருந்து தொண்டு செய்து வந்தேன். அதுபோது மருத்துவச்சாலைக்குரிய மருந்துகளை

சூரணம், பற்பம், செந்தூரம், மாத்திரை ஆகியவற்றை அவ்வப்போது வந்திருந்து, புடத்திலிட்டும், கல்வத்திலிட்டும் ஆக்கித்தந்த மகான் குருநாதர் பாடகச்சேரி சாமிகளாவர். அவரிடமிருந்த நூல்களை அவர் வழி நின்று கற்றறிந்ததோடு அவர் காட்டிய செயல்முறைகளையும் ஓரளவு கற்றிருக்கும் திறனாலும், திருவண்ணாமலை துந்தினா சுவாமிகள் என்னும் பரதேசிகளிடம் சோதிட நூல்களைக் கற்றுணர்ந்த தெளிவாலும், மருத்துவ மந்திர சோதிட நூல்களில் காணும் அரிய சொற்களுக்கும் பரிபாஷைகட்கும் அமைந்த பொருளறிந்து கொண்டிருந்த பயிற்சியாலும், இச்சிறந்த வசிய மந்திர, குளிகை சாதனைகளுக்குரிய பாடற்பொருளை நன்குணர்ந்து பொழிப்புரை எழுதியுள்ளதோடு, அரும் பதவுரையும் தந்துள்ளேன்.

குருவிகள் தரும் மூலிகை வேர்கள் :

வக்கனாத்தி, வானம்பாடி, செம்போத்து, கரிக்குருவி, வல்லூத்துக்குருவி (வல்லூறு) ஆகிய குருவிகள் கூடுகட்டும் போது, அவையிடும் முட்டைகட்கும், குஞ்சுகட்கும் பகையான பாம்பு, கீரி போன்ற பிராணிகள் கூட்டை நெருங்காமலிருக்க இயற்கை அளித்த சாதனமாகப் பறவைகளால் அறியப்பெறும் மூலிகை வேர்களைக் கொண்டுவந்து கூட்டில் பிணைத்துள்ளன. குஞ்சுகள் பறந்த பின்னர், கூட்டினை எடுத்துவந்து நெருப்பிலிட்டால் மூலிகை வேர் மட்டும் வெந்து சாம்பலாகாமல் இருக்கும். அதனை முறைப்படி எடுத்துக் குளிசமாக்கிக் கொண்டு, மந்திர உரு உச்சாடனங்களால் அதற்குச் சக்தியேற்றி, அவற்றைக் கொண்டு சித்து விளையாட்டுக்கள் செய்தல்.

மூலிகை வேர்கள் :

இந்நூலில் அறிவிக்கும் வித்தைகட்குக்குரிய மூலிகை வேர்களாக, ருத்திர மூலமெனும் நீலக்கொடிவேலி மூலிகை, மேகாதிவேர், பஞ்சதருவேர், கஸ்தூரி மூலிகை வேர்,

வக்கனாத்திவேர், தும்பைவேர், வெள்ளெருக்குவேர், சாகாத மூலிகைவேர், கலப்பைவேர், அனுசவேர், ஆறு வகைத் துடரிவேர்கள் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. மகாசக்திவாய்ந்தனவாகவும் சித்துவித்தைக்குரிய மூலங்களாகவும் இவ்வேர்கள் அறிமுகம் செய்யப்பெற்றுள்ளன.

வேர்கள் இருக்கும் இடம், அறிகுறி, நிறம் முதலியனவும் விளக்கப்பட்டிருப்பதோடு அவற்றை எடுக்கும் பக்குவம், குளிசமாக ஆக்கும் திறன், செயற்படுத்தும் இலக்கு, பயன் ஆகியவற்றையும் ஆசிரியர் குறிப்பாகவும் தெளிவாகவும் புலப்படுத்தியுள்ளார். மற்றும், லாட மூலிகை, ஊமத்தங்காய், கடுக்காய், விஷ்ணுகாந்தி, கோஷ்டம், செங்கழுநீர், அகில்கட்டை, செஞ்சாந்து, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் ஆகிய மூலிகை மருந்துச்சரக்குகளைக் கொண்டு செய்யும் மருந்துகளைத் தெளிவாக உரைத்துள்ளார்.

மிருகங்கள் வசியம்—வாய்க்கட்ட :

சித்தர் நெறியில் கொடிய மிருகங்களை வசியமாக்குதல் வாய்க்கட்டுதல் ஆகியவற்றிற்கு மந்திர உச்சாடனங்கள் கூறப்பட்டு வழக்கில் வந்துள்ளன. சித்தர் இத்தகைய முறைகளையும் ஏன் கண்டிருக்கவேண்டும், என்று ஆராய்வோமானால் அதற்கு விடை விபரம் கிடைக்காமலில்லை.

சித்தர்கள் மக்கட்கு உண்டான பிணிகளைத் தீர்க்கும் மருந்துவகைகளைச் செய்ய, அதற்குரிய மூலிகைகள், வேர்கள், பட்டைகள், கனிப்பொருள்கள் ஆகியவற்றைத் தேடி காடுகளிலும் மலைகளிலும் அலைந்துள்ளார்கள். அதுபோது அங்கு வாழும் புலி கரடி முதலான கொடிய விலங்குகள் அவர்களை எதிர்பட்டுத் தாக்கலாகும். அக்காலத்தில் அவர்கள் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதோடு அவ்விலங்குகளையும் வசியப்படுத்தி அடக்கும் மந்திரங்களை மரபுவழி சித்தியாக்கிக்கொண்டுப் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வரிய செயலைக் கட்டுமந்திரம் என்பர். இதனை இந் நூலின் 32-ஆம் பாடல் நன்கு விளக்குகின்றது.

அரிய சாதனைகட்குக் குளிகை:

மந்திரத்தால் நன்மையும் செய்யலாகும் தீமையும் செய்யலாகும். தீமை செய்வதற்குரிய மந்திர தந்திரங் களைச் சித்துநெறி காண்பித்திருப்பினும். இதனைச் செய்யாதே, பாவம் என்று எச்சரிக்கையும் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நன்மை தருவதாகச் செய்யும் முறைகளைச் செய், செய் என்று ஊக்கப்படுத்தப் பெறுகின்றது. அத்தகைய நன்மையைச் செய்கின்ற வித்தைகளுள் சிறந்ததொன்று 'பஞ்சதரு வேர் குளிகை'யாகும்.

இதனைக் கற்புடைய மனையாளுக்கு அணிவிப்பின் வெற்றுப்பாத்திரங்களில், வேண்டிய சோறு, குழம்பு, கறி வகைகள் உண்டாகவேண்டுமென்று அவள் தொட்ட அள வில், வேண்டிய அளவினை அப்பாத்திரங்களில் பக்குவமா கச் சமைத்த நிலையில் சுடச்சுடக் காணலாகும். அவற் றைக் கணவனும் மனைவியும் எடுத்துச் சென்று ஏழைகட்கு அன்னதானம் சிறப்பாகச் செய்யலாகும். இப்படியே தேவையானபோது, பாத்திரங்களை அம்மங்கை நல்லாள் தொட்டு, உண்டாக்கித் தொடர்ந்து அன்னதானம் செய்ய வும் சித்தி உள்ளது. இதற்கமைந்த குளிகை மந்திரம் ஆகியவற்றை பாடல் 12, 14ஆம் பாடல்களில் காணலாகும்.

மற்றொரு அற்புதக்குளிகையும் இந்நூலில் விளக்கப் பட்டுள்ளது. உலகில் மக்கட்பேறில்லாத குறையைப்போல் குறை பெண்களுக்கு இல்லை எனலாம். மக்கட் பேறடை யாத மலடிகட்கு மக்கட்பேற்றை உண்டாக்கும் குளிகை யைப் பற்றி, 28, 29ஆம் பாடல்களில் அருமையாக விளக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

விடப்பாம்பினை அடக்கும் வாய்க்கட்டும் வேர்க் குளிசம் பாடல் 42-ல் விளக்கப்பட்டுள்ளது.

கஸ்தூரியின் மகிமை :

உண்மையான கஸ்தூரிச் சரக்கினை, எங்கு எப்படிக் காண்பது என்பதுடன் அதனைக் கஸ்தூரிமானிடத்திலிருந்துஎடுக்கும் உபாயத்தினையும் 15—20 ஆறு பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

கஸ்தூரியினை வாயில் அடக்கிக் கொண்டால் நெருப்பினுள் எத்தகைய இடையூறுமின்றி இயங்கலாம். நீரினுள் மூழ்கி அடியில் பல நாழிகைகள் தங்கலாம். கானல் நோய்கள் அணுகாது.

இத்தகைய அனுபோகங்களை, உண்மையான கஸ்தூரியின் சக்தி உண்டாக்கும்.

மந்திரத்தால் மாய உருவங்கள் :

சதாசிவ மந்திர தியானத்தினாலும் வக்கானத்திக் குருவி மூலிகைவேர் (பாடல்-7) ஆகியவற்றாலும் மனித வுருவத்தை நாய், கழுதை, எருமை ஆகிய உருவங்களாக மாற்றிக்காண்பிக்கவும். தன்னையே உருமாற்றம் செய்து கொள்ளவும் உத்திகள் கூறப்பட்டுள்ளன.

பச்சிலைச் செடியொன்றின் வேரிற்கு இத்தகைய அற்புத சக்தியா! என்று வியக்கத் தோன்றும். வேர் என்ற அளவில் எத்தகைய சக்தியும் இருக்காது. மருந்திற்குரியதாக மட்டும் ஆக்கிக்கொள்ளலாகும்.

அவ்வேரினைக் குளிசம் செய்து. மந்திர உருவேற்றி குளிகையாக்கி உச்சாடனத்துடன் ஏவ, அவ்வேர்க் குளிகை மாயாசாலாங்களை உண்டாக்குகின்றது. வாயில் அடக்கிக் கொள்ள மாய உருமாற்றங்களை உண்டாக்குகின்றது. பார்ப்பதற்கு நாய், எருமை போன்று தோன்றும் சித்து நிகழ்கின்றது.

கட்டு மந்திரங்கள் :

கட்டு என்னும் மாந்திரீகக் கலைச்சொல், தன் வசப் படுத்தல் என்னும் பொருளுக்கமைந்ததாகும். சித்து செய் வோன், சூழ்நிலையின் காரணமாக, விலங்குகளையும், மக்கள், சபையோர், ஆகியவர்களையும் தன் வயப்படுத்த விரும்பும்போது அதற்குரிய குளிகையினைக் கொண்டும், மந்திர உருவினைக் கொண்டும், ஏவுதல் செய்து வெற்றி பெறுவர். அந்நிலையில் விலங்குகள் செயலற்று நிற்பன வாகும். சபையோர் மனமடங்கி நாவடங்கி மாந்திரீகன் ஏவினவழிச் செயல்படுவர்.

இவ்வித்தையினை, வாய்க்கட்டு. சபைக்கட்டு என்றும் நூல்கள் குறிக்கின்றன. இச்செயல் கண்கட்டு வித்தையின் ஒரு திறமாகுமென்றும் கூறலாகும்.

ஆசிரியர் கூறியுள்ள அனைத்துவகை மந்திரங்கட்கும் கருவான மூலமந்திரத்தினை, தக்க அனுபவம் நிறைந்த ஆசிரியர் வழிநின்று அறிதல் வேண்டுமென்பதனையும் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

கண்கட்டு வித்தைக்குச் சிறு தேவதைகளாகிய நீலி, பிடாரி, குறளி என்ற தேவதைகளை மந்திர உருவேற்ற சக்தியினால் வசப்படுத்தி, அவற்றை ஏவிச்செய்வரென்ப தனை, நீலிகட்டு, பிடாரிகட்டு, குறளிவித்தை என்ற அளவில் ஆங்காங்கே ஆசிரியர் குறிப்பதினால் அறியமுடி கின்றது கட்டு மாந்திரீகத்திற்கு வசியப்பொடிகளும் பயன்படுத்தப் பெற்றிருப்பதை

"கனவாக நினையாதே கூகை நீறு
கண்டவர்கள் பேசாமல் நாவடங்கும்" (பாடல்-31)

என்பதனாலும், மந்திரத்தால் வசியக்கட்டு நிகழ்வதனை.

" மருவுக்காய் லட்சமுருச் செவிக்கும் போது
மனுசர்சபை அரசர்சபை வானோர் கூட்டம்
நிருபனே கட்டாச்சு"

என்ற, பாடல்-30இன் விளக்கத்தாலும் அறியலாகும்.

" அடங்கவே மிருகமெல்லாம் வாய்கள் கட்ட
அம் ஐ அம் என்றறையி னுள்ளே
தொடங்கவே கரடிவாய் கட்டுமப்பா
சூதான புலிவாய் கட்டக் கேளு"

என்ற பாடல்-31. அறிவிக்கும் மந்திரங்களினால் கொடிய மிருகங்களை வசமாக்கி வாய்க்கட்டும் மந்திரங்கள் வெளிப் படையாக அறிமுகம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

அரச வசியக் கட்டு:

தன்மதிப்பை அரசர்களிடம் பெற சித்தர்கள் அரச வசியக்கட்டிற்கு, வசியவேர், வசியக்குளிகை, வசிய மந்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். வசியச் சுண்ணங் களையும் இச்செயலுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

" மனவாக விதிப்படியே சபையில் பூசி
மந்திரமும் இதுதான்டா"

" நிலவாகச் சபையடங்கும் அரசர் நாவும்
நெடுகலுமே அடங்கிவிடும்"

என்றறிவிக்கும் (பாடல்-31) பாடல் தரும் விளக்கத்தினால், நெற்றியில் பூசிச் சென்று வசியமாக்கும் நீறு (சுண்ணம்) பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

அரசனையும் சபையையும் சித்தர்கள் தன் விருப்பாகக் கட்டும் செயல்கள் நிகழ்வதனை மட்டும் ஆசிரியர் கூற வில்லை.

அரசனது வேண்டுகோளுக்கு இரங்கி, தன்னைப் பணிந்து குருவாகக்கொண்ட அரசனுடைய நாட்டைக்

கைப்பற்றும் முயற்சியாகப் பெரும் படையுடன் வந்து சூழ்ந்துகொண்ட பகையரசனை, அஞ்சி, வெறுண்டு படையுடன் திரும்பி ஓடுமாறு செய்ய மணி மந்திரங்களைப்பயன் படுத்திப் பாதுகாத்துள்ளனர்.

" தளமதனை நோக்கிச் செப்பக்கேளு
ரணத்திலே வராமல் ஓடிப்போவான் " (பாடல்-35)

" தான்பார்த்த சமர்க்களத்தில் தூவிப்போடு
சத்திராதி நாவெழும்பான் சேனையோடு "(பாடல்-36)

" பாரடா படைகுலைந்து ஓடும் பாரு
பரராசன் ஓடியூர் புகுவான் பாரே
யான்பார்த்த வித்தை யடா "

என்ற பாடற்பகுதிகள்காட்டும் நிகழ்ச்சிகளால், ஆசிரியராகிய சித்தர், தன் அன்புக்குரிய அரசனுக்குப் பகையால் துன்பம் வந்த போது, செய்து அனுபவமாகக் கண்ட கட்டு வித்தையைப் புலம்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகும்.

நஞ்சுண்டார் வித்தை :

இந்நூலாசிரியராகிய சித்தர் நஞ்சுண்ட சித்தர் என்னும் மகானிடம் நேரில் கற்றறிந்த அரிய கண்கட்டு வித்தையைப் (பாடல்-40) புலப்படுத்துகின்றார்.

இவ்வித்தைக்குக் குளிகையும் மந்திரமும் கருவாக உள்ளன. குளிகையைத் தலையில் வைத்துக்கொண்டால், பிறர் பார்த்து வியக்கும்படியான ஜாலங்களைச் செய்யலாம். வெறுங்கையை மூடிக்கொண்டு, ஒரு முயலைக் கைக்குள்ளிருந்து எடுத்துக்காட்டலாம்.

குளிசத்தை வாயில் அடக்கிக்கொண்டு வாள் அல்லது வேலை நாட்டி அதன் மீது பாய்ந்து காட்டலாம். பார்ப்பவர்கட்குக் கண்கட்டாகிவிடும். வாளும் பாயாது. தீங்கு

உண்டாகாது. எல்லாம் பொய்ச்செயல். பொய்த்தோற்றமே தோன்றும். இவ்வித்தையைக் கருவி வித்தை என்று காட்டியுள்ளேன்.

அனுசவேர் வாங்கி குளிசமிட்டுத் தலையில் அணிந்து கொண்டு போரிட்டால் பகைவரை வெல்லலாம். வாளால் பகைவன் வெட்டினால், வெட்டு மேல் விழாது. தடி கொண்டு பகைவன் தாக்கும்போது, கண்ணால் நோக்கும் அளவில் அத்தடி தூள் தூளாகப் போகும். ஒருவிரலால் தேங்காயைத் தொட்ட அளவில் உடையும். இவைகளெல்லாம் அனுசவேரினால் ஆகும் வித்தைகளாகும். (பாடல்-43)

சித்தரின் ஆணை :

வித்தைகள், வசியங்கள், கட்டுகள், ஜாலங்கள் இவற்றுடன் பகைவரை முடக்கவும் அடக்கவும் அழிக்கவும் செய்யும் மந்திர சாதனைகளையும் இந்நூலில் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

கேளப்பா! பாரப்பா என்று எடுத்துக் கூறிய சித்தர், செய்வினைகளை உன்னைக் காப்பாற்றிக் கொள்ளமட்டும் பயன்படுத்து. பக்தியுடன் குருவுரைத்த அறிவுரையை மனத்தில் வைத்துக் காப்பாற்று; என்று காப்புரையாகக் கூறியுள்ளமை நினைவில் கொள்ளத் தகுந்ததாகும். (பாடல்-47)

" உற்பனமாய் மகாகொடுமை செய்யாதே நீ
பண்டுபா ருனக்குரைத்த குருவின் வார்த்தை
பத்தியாய் மனத்தில் வைத்துக் காப்பாத்துவாயே "

இந்நூலைப் படித்துத் தேர்ந்துள்ள சித்துநெறியாளர்கள், மந்திரவாதிகள், தீவினைச் செயல்களை வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் செய்யக்கூடாது என்பது சித்தரின் சத்திய வாக்கு.

தன்னுடைய பாதுகாப்பிற்கு மட்டும் ஓரளவு பயன்படுத்தி, அது தீர்ந்தவுடன் செய்வினையை மாற்றிப் பணிந்த பகைவனுக்கு அருள்செய்ய வேண்டும். (பரிகாரம்) இவ்வாறு செய்யாமல், பொருள் சேர்ப்பதற்கும், காம குரோத இச்சைகளை நிறைவு செய்து கொள்வதற்கும், பிறருக்காக அவர்கள் காட்டிய மக்களுக்கு கேடு செய்வானானால், தீராத பாவம் உனக்கு வரும், தீராத நோய்கள் உன்னைச் சேர்ந்து வருத்தும். தெருவில் எச்சிலைப் பொறுக்கும் இழிநிலையை அடைந்து போவாய் என்று ஆணையுடன் அறிவிக்கின்றார். (பாடல்-62)

நல்லனவற்றைச் செய்து அனுபோக சித்தியுடன் பிறர் புகழ இருப்பாயாக என்றும் காப்புரையுடன் வாழ்த்துரையும் வழங்கியுள்ளார்.

நிறைவு:

நூல்களினின்றும் தனிப்புதுமை பெற்ற இந்நூல் போன்ற நூல்கள் சித்த நெறிமுறைகளை அறிமுகப்படுத்தும் நூல்கள் என்ற அளவில் மக்கள் அறிந்துகொள்ளும் அளவே ஏற்புடையதாகும். சுட்டிக்காட்டிய திறங்களைக் கற்றுத்தேர்ந்து, செயல்முறைகளில் ஆக்கம் பெற்றார் சித்தி பெற்ற அளவில் நிறைவான மனத்துடன் மகிழ்ந்திருத்தலே சிறப்பமைந்ததாகும் என்பது சித்தர் வாக்கு. ஆதலின், இந்நூலினை கற்றுணர்ந்தார் தீய நெறிக்கு அறிவியலைச் செலவு செய்து பாபியாகாமல், மக்கள் மதிக்கும் நற்செயல்களைச் செய்து மாண்புடன் வாழ முருகன் திருவருள் நிகழும் என்ற அளவில் இந்நூல் பயன் பெறுவதாகும்.

அகஸ்தியர் 1200 - ல்

சதாசிவத் தியானம்

நூல்

சதாசிவ - ருத்திர தியானம்

பேசுரேன் ருத்திர சங்கார மூர்த்தி
பிறகுமிக வுக்கிர சங்காரம் கேளு
பூசிரேன் றங்அங் கீசறீங் ங்ங்ங் வென்று
பூட்டுவாய் ருத்திர சங்கார மாச்சு,
ஆசுரேன் இதனை யெல்லாம் தெரியாமற் றான்
அடக்கிவைத்தான் ஆயிரத்தில் வெளியாய்ச் சொன்னேன்
கூசிரேன் புள்ளொருகை வானாங் கூட்டில்
போயெடுத்துத் தீயிலிடக் கூடு வேகா. -1

பொழிப்புரை :

சொல்லுகின்றேன், ருத்திர சங்காரமூர்த்தியின் மகா வீரியப் பெருமையைக்கேள். பூசிக்கின்றேன், றங் அங் கீச றிங் ங் ங் ங் என்று. இதைப்போல் நீயும் திறமையாகச் செபிப்பாய் அதனால் ருத்திர சங்காரம் கைக்கூடும். ஆசையோடு சொல்லுகிறேன். இதனையெல்லாம் தெரியாமல் மறைமுகமாக ஆயிரம் பாடலில் அடக்கி சொல்லி வைத்தார். வெளிப்படையாகச் சொல்லக் கூசுகிறேன்.

பறவைகளுள் ஒருகை வானாங் குருவிக்கூட்டைப் போய் எடுத்து வா. அக்கூட்டைத் தீயிலிடக் கூடு வேகாது.

(ஆகரேன்—உள்ளதை உள்ளவாறு சொல்லுகிறேன்)

ருத்திர மூலம் - குளிகை

வேகாது அதிலிருக்கும் ருத்திர மூலம்
வேர் நீலக் கொடிவேலி யிதுகாணப்பா
சாகாது ஒருநாளு முன்மேல் தானே
சாபமிட்டுக் குளிசமா யடைத்துக் கொண்டால்
போகாது விந்துவங்கே வெளியில் சேரும்
பூமியிலே சாலவித்தைச் செய்யக்கேளு
மேகாதி வேரெடுத்து வைத்துக் கொண்டு
விதித்தவிதி மந்திரத்தைச் சேவி சேவி. 2

(பொ-ரை.) ருத்திர சங்கார மூர்த்தியின் மகாசக்தியான பெருமையைப் பற்றிப் பேசுகிறேன் கேள். வாலாங்குருவிக் கூட்டில் இருக்கும் ருத்திரமூலம் என்னும் வேர் தீயில் வேகாது. நீலக்கொடிவேலி வேர் இதுதான் கண்டுகொள். உன்னிடத்தில் அவ்வேர் பயனற்றுப் போகாது. சாபமிட்டு அதனைக் குளிசமாக்கி அடைத்துவைத்துக்கொள். அதன் சக்தி வெளியில் போகாது. வெளியுலகத்தில் அக்குளிகை யினால் சாலவித்தை செய்யக்கேள். மேகாதிவேர் என்னும் அதனை எடுத்து கையில் வைத்துக்கொண்டு, சொன்ன முறைப்படி மந்திரத்தை செபிப்பாயாக.

(மேகாதிவேர்—நீலக்கொடி வேலி மூலிகைவேர்)

தெய்வங்களைக் காண-குளிகை

சேவிக்க தேவிகன்னி மகாமாயைப் பெண்
திருவுருபோலே தோன்றிநட மாடச் செய்வாள்
ஆவிக்க தும்புருநா ரதரும் வந்து
அரியநடமிட் டருளிசையு வீணை தம்பூர்

மேவிக்க விசையராகம் பயிலு வார்கள்
விருதான தியானமிட்டுக் குளிசம் வாங்கி
சேவிக்க மறையுமடா புள்ளின் மூலம்
சோதிதிரு செங்கார தியானத்தாலே. 3

(பொ-ரை.) சக்தி வாய்ந்த நீலக்கொடிவேலி மூலத்திற்கு ருத்திர தியானம் செய்ய, தேவிமகாமாயைப்பெண் அழகான வடிவில் காட்சிக்குத் தோன்றி நடமாடுவாள். மந்திர உச்சாடனம் செய்ய தும்புரு, நாரதர் இருவரும் தோன்றி காணற்கரிய நடமிட்டு தம்பூர் வீணை பொருந்த இசைத்து ராகற் பயிலுவார்கள்.

உனக்குப் புகழான, சங்கார ருத்திர தியானம் செய்து, குருவி மூலக் குளிசம் எடுத்து மந்திரத்தைச் செபிக்க, தெய்வக்காட்சிகள் யாவும் மறைந்து போகும். சோதித்துப் பார். இச்செயலுக்குத் திரு சங்கார ருத்திர தியானமே உருவாகும்.

மகேஸ்வர தியானம்

தியானத்தில் மயேஸ்வரத்தின் தியானம் கேளு
சிங் மங் றீங் கென்றேதான் செபித்தால் லட்சம்
மாட்டியோதி மானம்பாடிக் கூட்டை தன்னை
வாங்கிமுன்போல் வேர்குளிசம் பண்ணி வைத்தால்
பாரமென்ற கடும்பாரம் எடுக்க லாமே
தியானத்தால் வேராலும் சித்தி யாச்சு
சேரவே மூலிதன்னால் வித்தை தன்னைச்
செய்துபார் கடப்பாரை முழுங்கலாச்சு 4

(பொ-ரை) தியானங்களில் மயேஸ்வரத்திற்குரிய தியானத்தினைக் கேட்பாயாக. சிங் மங் றீங் என்று வசத்தால் லட்சம் உரு தொடந்து ஓதி, மானம்பாடிக் குருவிக் கூட்டை முன்போல் கொண்டுவந்து அதிலிருக்கும் வேரைக்

கண்டு, குளிசம் செய்து வைத்துக்கொள்வாய். கடும் பாரங்களையும் எடுக்கலாம். இது தியானத்தினாலும் வேரின் சக்தியாலும் சித்தியானதாகும். இந்த மூலிகையை குளிகை செய்து அடக்கிக் கொண்டு வித்தைகளைச் செய்து பார்ப்பாயாக. கடப்பாரை போன்ற வலிய பொருள்களையும் விழுங்கிக் காட்டலாகும்.

(குளிசம்—மந்திர உருவேற்றிச் சித்திபெற்ற வேர் மூலம்)

சதாசிவத்தியானம் - மூலம் குளிகை

முழுங்கலாம், சதாசிவத்தின் தியானம் கேளு
முக்காலும் சிவாயநம தேவா என்று
மழுங்கலாய் லட்சமுரு மாட்டி யோது
வக்கனாத்திக் கூட்டைநீ வாங்கி வந்து
அழுங்கலாய் முன்போல தியானஞ் செய்து
அவையடக்க மாயிருந்து செய்யக் கேளு
புழுங்கலாய் மாறாட்டம் பண்ணப் போடப்
போவான்கேள் கழுதைபோல் நாயைப்போலே 5

(பொ-ரை) மானம்பாடி குளிகையின் சக்தியால் அரிய பொருள்களை விழுங்கிக் காட்டும் வித்தை யறிந்தாய் மேலும், சதாசிவத்தின் தியானம் கேட்பாயாக. மூன்று காலத்திலும் 'சிவாயநம தேவா' என்று ஒரே முறையில் இலட்சம் உரு தொர்ந்து செபிப்பாயாக.

வக்கனாத்திக் குருவிக் கூட்டைக் கொண்டுவந்து மெதுவாக முன்போலத் தியானம் செய்து, அதிலிருக்கும் வேரினை எடுத்துக்கொண்டு, புலனடக்கமுடன் இருந்து செய்யும் முறையினைக் கேட்பாயாக. மனம் வருந்தும்படியாகச் செய்யும் கயவனை நிலைமாற்றம் செய்யப் பயன்படுத்தவும். அவன், கழுதையைப் போல் நாயைப் போல் போவான். மேலும் கேட்பாயாக.

உருவ மாற்றம் செய்யவும் கொள்ளவும்

நாயைப்போ லாகவென்று தோன்றுவா னானால்
நாயடா அதோவருது என்பார் பாரு
மாயப்போய் நாய்போலே இருந்தார்க் கெல்லாம்
மனுடரும் பேதிக்கும் மாயம் மாயம்
சீ அப்பாலே போ போ வென்று சொல்லித்
திரும்பஉரு தனைப்பார்த்துச் செப்பக் கேளு
ஈயைப்போல் எருமையைப்போல் கழுதை போலே
இருக்குதென்று நீயுரைத்தா லிருக்கும் பாரே. 6

(பொ-ரை) நாயைப்போல் ஆகவென்று செபித்து நோக்க அப்படியே தோன்றுவானானால், நாயடா அதோ வருகின்றது என்பார்கள் பார்ப்பாய். மாய்கையாய் நாய் போல இருந்தவர்கட்கெல்லாம், முன்னர் பார்த்த மானுட வுருமாறி வேற்றுருவாகத் தோன்றும். மாய வித்தை.

சீ அப்பாலே போ போ என்று சொல்லித் திரும்பவும் மந்திர உச்சாடத்தினை முறையாகப் பார்த்துச் சொல்லி, ஈயைப்போல் எருமையைப் போல் கழுதையைப்யோல் இருக்கின்றதென்று நீ பார்த்துச் சொன்னால் அப்படியே அவன் தோன்றுவான். இந்த மாயையினைப் பார்ப்பா யாக.

வக்கனாத்தி வேர் - குளிகை

இருக்குமடா வக்கனாத்தி மூலி வேரை
இருதிறமா(ம்) யந்திரவே ராகும் மூலம்
பெருக்குமடா வாயினால் சொன்ன தெல்லாம்
பெண்ணுக்கும் ஆணுக்கும் தெரியு மப்பா
கருக்குருவாய்ச் சொன்ன தெல்லாம்
கண்டுகொள் எண் ஆயிரமும் கருதிப் பாரு
பொருக்குமடா கமலத்தோன் பூட்டி வைத்த
பூருதியானிகரே புகழ்ந்து பாரு. 7

(பொ-ரை) வக்கானத்திக் குருவிக் கூட்டிலிருக்கும் மூலிகைவேர் இருவகையாக இருக்கும். அந்த வேரினால் வாயினால் சொன்னதெல்லாம் பலிக்கும். அந்த வேர் பெண் ஆண் என்ற வகையில் தெரியும். சூட்சமமாகக் கண்டுகொள்ளச் சொன்னதிது. இதற்கு மாந்திரீகம் கண்டு கொள். ஆயிரத்தெட்டு உரு விரும்பிச் செய்து பார். விரும்பியதைத் தருவதாக இருக்கும். கமலமுனி மறைத்து வைத்திருந்த வித்தை. தொடங்கு தியானிகரே, புகழ்ச்சியாகச் செய்து பார்ப்பாயாக.

பிரமன் தியானம் - செம்போத்து வசியக் குளிகை

பாரடா பிரமனுட தியானம் கேளு
பண்பாக "நங் கிலி சிங் மங்" கென்றே
ஓதடா உருஆயிரத் தெட்டு மோதி
செம்போத்தின் கூட்டைமுன்போல் செய்து பாரு
வீறடா சபையடங்கும் நாவடங்கும்
மேலான பகையுடனே மாளும் மாளும்
காறடா குருபதத்தை மேன்மே லுந்தான்
கைய்கண்ட வித்தையிது கண்டு கொள்ளே. 8

(பொ-ரை) பிரமனுடைய தியானம் (மந்திரம்) சொல்லுகின்றேன் கேட்பாயாக. பண்பாக 'நங் கிலி சிங் மங்' என்ற மந்திரத்தை ஆயிரத்தெட்டு உரு ஓது. ஓதிய பின் செம்போத்துப் பறவைக் கூட்டை முன்போல் செய்து பாரு. அதிலுள்ள மூலிகை வேரின் பலனாக உனக்குத் தானென்ற மனத்திடம் வரும். சபையோரை அடக்கலாம் பிறர் நாவடக்கிப்பேச வைக்கலாம். கொடிய பகையையும் அழிக்கலாம், அழியும். குரு பதத்தைச் சிந்தனையில் காப்பாற்று. உனக்குக் கைகண்ட வித்தை இது. மேன் மேலும் கண்டுகொள்வாய்.

(செம்போத்து — செம்பகப்பறவை)

கருக்குருவி - வசியக் குளிகை

கண்டுகொள்ளு நம்பியுட மாய மந்திரம்
கருணையுடன் பச்சைவர்ண மூர்த்தி யென்று
உண்டுபண்ணக் கருக்குருவிக் கூட்டை முன்போல்
உபாயமாய் மணியாக்கி யுரைக்கக் கேளு
பண்டிருந்த பெரியோரைக் கண்டு கொள்ளு
பதிதோனும் நிதிதோனும் பாரு பாரு
திண்டுமுண்டு பண்ணாதே சித்தி யில்லை
சித்திச்ச சகலதுவுஞ் சித்தியாமே. 9

(பொ-ரை.) கண்டுகொள்வாய் நம்பியின் மாய மந்திரம். கருணையுடன் விளங்கும் பச்சைவர்ண (நிற) மூர்த்தி (மூலிகை) என்று கண்டுகொள்.

மற்றுமொரு குளிசம் செய்துகொள்ள, கருக்குருவிக் கூட்டை முன்போல் கொண்டுவந்து, சாமர்த்தியமாக அதிலிருக்கும் வேரினை எடுத்து முறைப்படி மணியாகத் திரட்டிக்கொள். அதன் சக்தியைக் கூறுகின்றேன் கேள். முன்னர் இந்த வித்தையில் தேர்ந்துள்ள பெரியோர்களைக் கண்டு வணங்கி, உத்திகளைத் தெரிந்துகொள்.

நீ நினைத்த இடம் தோன்றும். புதையல் தோன்றும் பார். வீணாசையால் தவறுகள் செய்யாதே. சித்தியில்லாமல் போகும். நேர்மையுடன் செய்தால் நீ நினைத்த காரியங்கள் யாவும் சித்தியாகும்.

வல்லூத்துக்குருவி - பஞ்சதருவேர், குளிகை.

சித்தியாம் வல்லூத்தின் குருவிக் கூட்டைத்
தீய்க்கொளுத்திச் சுட்டாலும் வேர் வேகாது
பத்தியாய் அந்தவேர் வெள்ளை மஞ்சள்
பச்சையொடு சிவந்தவர்ணங் கறுப்புமாகும்

முத்தியாம் பஞ்சவர்ண மூர்த்தி ரூபம்
முக்கியமடா யிதின்விபரம் பிரித்துக் கேளு
சத்தியாந் தீயகளை யிருந்த மூலி
சார்பஞ்ச தரு(தரும்) வேராமே.

(பொ-ரை.) சித்தியாகும் வல்லூத்துக் குருவிக் கூட்டைத் தீயில் கொளுத்திச் சுட்டாலும், அதிலுள்ள மூலிகைவேர் வேகாது. அடர்த்தியான அந்த வேர் வெள்ளை, மஞ்சள், பச்சை, சிவப்பு, கறுப்பு ஆகிய ஐந்து நிறங்கள் கூடியதாக இருக்கும். நினைத்தது பலிக்கும் பஞ்சவர்ண மூர்த்தியின் வடிவமான மூலம் முக்கியமானது. இந்த வேரின் சக்தி விபரத்தைத் தனியாகப் பிரித்துக் கூறுகின்றேன் கேள். மகா சக்தியுடையது. தீயின் கொழுந்து போலமைந்த மூலிகை. கற்பக தருவைப் போன்று பயன் தரும் வேராகும்.

(வல்லூத்துக்குருவி—வல்லூருப்பறவை)

மகாசித்திக்கு - மந்திர உபாயம்

பஞ்சதரு வேர்வாங்கி தீப தூபம்
பணிமாறி பூசையிட்டுக் குளிச மாடி
"கஞ்சமலர் மூர்த்திசிவ ரூபம் தேவா
கருதியிரு பருதி யா வா யா வா ய்
உன்செயலே அருள்பெருக" வேணு மென்று
உபசரித்து மணியிறுக்க உபாயம் கேளு
விஞ்சையிலே வாக்கில்வைத்த தெல்லாம் சித்தி
விதிசித்தி மதிசித்தி உண்டாங் காணே. 11

(பொ-ரை.) மேலே சொன்ன பஞ்சதருவின் வேரினை எடுத்து அதற்குத் தீப தூபம் காட்டி உபசார பூசைகள் செய்து அதனைக் குளிசமாக அமைத்துக்கொண்டு, "கஞ்ச மலர் மூர்த்தி சிவ ரூபந்தேவா கருதியிரு பருதி யா வா யா வாய் உன்செயலே அருள் பெருகவேணும்" என்று உபசரித்து வேண்டி, வேரை மணியாக்கத் கேதள்ந்திரம்.

மாயவித்தையிலே வாக்கில் வைத்துச் சொன்னதெல்லாம் சித்தியாகும். (பலிக்கும்) கட்டளையிட்டது சித்தியாகும். நினைத்தது சித்தியாகும். காண்பாயாக.

குளிசம்—வேரைத்திரட்டி வைத்துக்கொள்ளல்
மணி—வேரை இறுக்கி உருட்டிக் கவசம் செய்து வைத்துக் கொள்ளல்.

கற்பகக் குளிகை

உண்டான காரியங்கள் எல்லா முண்டு
ஒன்றொன்று குறையாது மனையாள் பேரில்
விண்டாது அவள்கழுத்தில் தரித்துப்போடு
மெல்லிநல்லாள் பாத்திரத்தைத் தொட்டால்
பண்டான அரிசியொடு சகல சோபன [போதும்
உபசார பதார்த்தமெல்லா மங்கு பஞ்சதருவே
கொண்டோடு "மறவணியகா தேவி யீது [ஈயும்
கோதி" என்றா லிதுகறிகள் சோதியாம் பாரே.

(பொ-ரை) பஞ்சதரு குளிகையால் உலகத்தில் உண்டான காரியங்கள் எல்லாம் உண்டாகும். ஒன்றும் குறைவராது. குளிகையை உன் மனைவியிடத்தில் மன மாற்றமில்லாமல், அவள் கழுத்தில், கயிற்றில் பந்தனம் செய்துபோடு. அவள் பாத்திரங்களைத் தொட்டால் போதும். முன்னர் இருந்த அளவில் அரிசியோடு உணவுக் குரிய சகலவிதமானதும் மேலான விருந்துக்குரியதுமான கறிவகைகளெல்லாம், பஞ்சதருவின் சக்தியே கொடுக்கும். சோறுடன் பதார்த்தங்களை எடுத்துக்கொண்டு செல்.

"மறவணிய கா தேவி யீது கோதி" என்ற மந்திர உச்சாடனத்தால், இத்தகைய உணவுக் கறிவகைகள் சமைத்ததாகவும் புதிதாகவும் பலவிதமாகவும் உண்டாகும் பார்ப்பாயாக.

அன்னதானச் சித்து

கொதியம் பாரன்ன சத்திரக் கோடிநீ கட்டிக்
கொண்டிருந்து வந்தவர்க்கு அன்னம் ஈவாய்
நிதியம்பார் உன்னிடத்தில் இருக்கு தென்பார்
நித்தநித்தம் இப்படியே அன்ன மீய்வாய்
பதியம்பா ருன்பாரி தேவி யாச்சு
பார்பதிக்கு நீயுமொரு பரம னாச்சு
கதியர்பா ருலகமெல்லாம் உன்னை மொய்ப்பார்
கேட்டதெல்லா முன்னாலே குமியும் பாரே. 13

(பொ-ரை.) உணவுப் பதார்த்தங்கள் ஆக்கிக் கொட்டிவைத்ததைப் போல் உண்டாவதால் சத்திரமனைகள் பல கட்டிக்கொண்டு, அதில் நீயிருந்து பசியோடு வந்தவர்க்கு அன்னம் கொடுப்பாய். இந்த மாயத்தை உணராமல் உன்னிடத்தில் மிகுந்த செல்வம் சேர்ந்து இருக்கின்றது என்பார்கள். நாள்தோறும் இப்படியே அன்னதானச் சித்துசெய்து கொடுப்பாயாக. இதனால் வரும் நல்ல பலனை அனுபவித்துப்பார். உன் மனைவி பிறருக்கு தெய்வமாக இருப்பாள். அந்த பார்வதிக்கு நீயும் பரமனைப் போலாச்சு. இந்த சித்தினால் விளைவதைப் பார். உலக மக்களெல்லாம் உன்னைத் தேடிச் சூழ்ந்துகொள்வார்கள். அவர்கள் கேட்ட பொருள்களெல்லாம் உன்னாலே கொடுக்கக் கூடியதாகக் குமியும் பார்ப்பாயாக.

மீண்டும் உண்டாக - சாதனை

குமியவே வந்தவந்த பேருக் கெல்லாம்
கொள்ளமட்டும் அன்னமிட்டு அடைக்கா யந்த
மய்யம்பார் பாத்திரத்தைத் தொட்ட போது
கற்புடையாள் கையாலே தொட(வே) வேணும்
இமையும்பா ரிமைகட்டி முழிக்கு மூன்னே
ஏந்திழையாள் சங்காந்திக் கெல்லா மீளும்

உமையும்பா ரல்லாது வேறொன் றில்லை
உன்பாரி புண்ணியமே யுனக்கு நன்றே. 14

(பொ-ரை.) சோறும் பதார்த்தங்களும் குவியவே வந்தவருக்கெல்லாம் அவர்கள் விரும்பிய மட்டும் அன்ன மிட்டு அடைத்து வைத்துவிடாதே. சந்தர்ப்பம் வந்த போது, கற்புடையாள் (மனைவி) கையாலே மீண்டும் பாத்திரத்தைத் தொட்டு விரும்பிய பதார்த்தங்கள் வர வேண்டும் என்றால், கண் இமைகள் மூடித்திறக்குமுன்னே அவள் கை ஸ்பரிசத்திற்கு விருப்பியதெல்லாம் மீண்டும் வரும். தேவைக்கேற்பத் தோன்றுமேயல்லாமல் வேறொன றில்லை. உன்னால் செய்யத்தக்க புண்ணியம் உனக்கு நல்ல புகழைத் தரும்.

(சங்காந்தி — தொட்ட ஸ்பரிசம்)

கஸ்தூரிப்பிள்ளை - அடையாளம்

நன்றான கஸ்தூரிப் பிள்ளை வாலு
நடுக்கானக முனக்குங் கிட்டுங் காலஞ்
சென்றாடி யவ்வனத்தில் செல்லுங் காலங்
சிறுசாக ஒருமதளை போலே நிற்கும்
கண்டாலுங் கால்நாலு மொளிகள் பித்துங்
கடுவனுட வுயிர்மாப் பிள்ளை தானும்
அன்றேதான் குளிர்ச்சிபெறு நிலத்தில் சேரு
மதுபிடிக்க உபாயமினி யறையி ரேனே. 15

(பொ-ரை.) நன்மையைத் தருகின்ற கஸ்தூரிப் பிள்ளையின் நறுமணமுள்ள தாது உனக்குக் கிடைக்கின்ற காலம் கூடுமேயானால், நடுக்கானகத்தில் சென்று திரிந்து, அது வாழும் வனத்திற்குள் செல்லும்போது, சின்னவடிவில் ஒரு பச்சைக் குழந்தையைப்போல் நிற்கும். கால் நான்கா கும். விழிகள் பிதுங்கியதாக இருக்கும். ஆணினுடைய தோற்றம் உயிர்ப்பாக இருக்கும். எப்பொழுதும் குளிர்ச்சி

யான நிலத்தில் சேர்ந்திருக்கும். கஸ்தூரி மானைப் பிடிக்கின்ற தந்திர உத்தியினை இனி விளக்கமாகச் சொல்லுகின்றேன்.

கஸ்தூரிப்பிள்ளை—கஸ்தூரி மான்
பிள்ளை—இன இளமை மரபுப்பெயர் (அணில்பிள்ளை, கீரிப் பிள்ளை என்பதைப் போல)

கஸ்தூரி-இருக்கும் இடம், பெறும் முறை

அறையிரேன் தீவுகளில் மலைக ளுண்டு
அதிலிருப்பார் வேனலது பொறுக்க மாட்டார்
முறையுடனே ஆள்நாடா காட்டி னுள்ளே
முனைமதியன் சந்திரன்தன் பிரகா சத்தில்
உறையுமடா அவ்விடத்தில் வாலை நாட்டி
உதித்திடு தண்ணீரு விட்டு வைப்பாய்
உறையவே ராக்கால மதனில் சாயும்
உறங்கினால் மறந்திடும் பின்னெழும்
பொட்டாதே. 16

(பொ-ரை.) சொல்லுகின்றேன். தீவுகளில் மலைகள் இருக்கும். மலைமீதுள்ள சோலைகளில் கஸ்தூரி மான் இருப்பார். வெப்பத்தைப் பொறுக்க மாட்டார். அவருக்கமைந்த இயல்புடனே மனிதர் செல்லாத காட்டினுள்ளே முழுமையான சந்திரன் ஒளியில் அவ்விடத்தில் வாலை நிமிர்த்தி நிற்பார்.

அது வாழும் இடத்தில் சுனையின் குளிர்ச்சியான நீரைக் கொண்டுபோய் ஊற்றிவை. குளிர்ந்த இடத்தில் அது தங்கும். இரவில் சாய்ந்து படுக்கும். உறங்கினால் சூழ்நிலையை மறந்துவிடும். பின்னர் எழும்பச்செய்யாது.

இருப்பார், மாட்டார் என்று மானைக் குறித்துக் கூறிய சுட்டுப் பெயர், அதன் உயர் மதிப்பால் சுட்டியதாகும்.

இதுவும் அது

மூட்டாதே விடியுமுன்னே மிருக சாதி
ஓடுருவு முன்சென்று பார்த்தா யானால்
எட்டாது பாத்திரங்கள் கொண்டு முன்பின்
னம்மதிலே ஆண்பெ ணீதென்று நீயும்
வெட்டாது கத்திகொண்டு குருதி மூட்டி
வெவ்வேறே பாத்திரத்தைக் கொண்டு வாமுன்
சட்டாகும் பூரமது பொடித்துப் போடத்
தயிருறைந்தார்ப் போலுறைந்து இருக்கும்
தானே. 17

(பொ-ரை.) விடிவதற்கு முன்னே அதனிடத்துச் செல்லாதே. மிருகங்கள் அங்கு ஊடுருவிச் செல்வதற்கு முன்னர் சென்று தொலைவில் நின்று பார்த்தாயானால் தெரியும். பாத்திரங்கள் எடுத்துக்கொண்டு. கஸ்தூரி மானின் முன் பின் பகுதிகளைக்கொண்டு, ஆண் இது, பெண் இது என்று அறிந்து நீயும் கத்தியைக்கொண்டு வெட்டி விடாமல் அதன் தாது (இரத்தம்) பெருகச்செய்து, தனித் தனிப் பாத்திரங்களில் பிடித்துக்கொண்டு வா. அதில் கரைந்துபோகும் கற்பூரத்தைப் பொடித்துப் போடு. தயிருரைந்தாற்போல் அத்தாது உறைந்து இருக்கும்.

எட்டாது—எட்டாத தொலைவு குருதி—தாது வெளிப்பாடு

கஸ்தூரி-சஞ்சீவி

இருந்தாற்போல் திரளுமே கட்டி யாக
இனஞ்சேர்ந்து கஸ்தூரி நிச சரக்கு
ஊருமே பொறியாய் வைத்துக் கொண்டால்
உலகத்தில் சூடேது தாக மேது
உருமேகமென்ற கானலேது உள்சூடேது
சன்னியேது வற்றாநா வறட்சி யேது
கருவான மண்டலத்தில் காண்பா யப்பா
சஞ்சீவி கஸ்தூரி பிள்ளை தானே. 18

(பொ-ரை.) கஸ்தூரித் தாது, கற்பூரம் சேர்த்த அளவில் அப்படியே கட்டியாகத் திரளும். கஸ்தூரி என்னும் உண்மையான சஞ்சீவிச் சரக்கு. பக்குவமாகப் பாதுகாத்து வைத்துக் கொண்டால், உலகத்திலுள்ள மக்களுக்கு இந்த சஞ்சீவியினால்—சூடு தணியும், தாகம் இருக்காது. உருமேகமென்ற கானல் நோய் வராது. உள்சூடு என்னும் வெட்டை நோய் நீங்கும். வாதத்தாலாகும் சன்னி வராது. நாவற்றும் வறட்சி இருக்காது.

சஞ்சீவி கஸ்தூரிப்பிள்ளைத் தாதுச் சரக்கினைப் பாதுகாப்பான குளிர்ந்த இடத்தில் வைத்துப் பயன்படுத்தி நலம் காண்பாயப்பா.

கருவான மண்டலத்தில்—மருத்துவகால திட்ட மண்டலத்தில் என்றும் பொருள் தரும்

கஸ்தூரியைச் சோதிக்கும் முறைகள்

பிள்ளையிலே கஸ்தூரிப் பிள்ளை யுண்டு
பின்னையுமோர் கஸ்தூரி பட்சி யுண்டு
விள்ளையிலே யிவைகண்டால் இந்தப் பாகம்
மெய்த்திட்டு மகாகுளிர்ச்சி யாகும் பாரு
கொள்ளிகொண்டு கொப்பரையில் வெந்நீர் தானும்
கொதிக்கையிலே அரிசியிடை கஸ்தூரி போடு
உள்ளசலம் குளிர்ந்துபோம் பருச்சை பாரு
உனக்கென்ன யிதுவேணும் பாரு பாரே. 19

(பொ-ரை.) பிள்ளை என்ற பெயருடன் கூடிய பிள்ளைகளிலே கஸ்தூரிப்பிள்ளை உண்டு. மற்றும் ஒரு கஸ்தூரிப்பறவை உண்டு. ஆராய்ந்து சொல்லும்போது இவை இரண்டையும் அருகில் கண்டால், கஸ்தூரிப்பிள்ளை இருக்கும் உடல்பகுதி சிலிர்த்திட்டு மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். (பறவை உள்ள பகுதியால் எதுவும் தெரியாது) இதனைப் பார்த்துக்கொள். மிகுந்த தீயினால் கொப்பரை

யில் கொதிக்கும் வெந்நீரில் ஒரு அரிசி எடை கஸ்தூரியைப் போடு. கொதிக்கும் நீர் உடனே குளிர்ந்து போகும். இந்தச் சோதனையைச் செய்துபார். உனக்கு வேறென்ன வேண்டும்? கஸ்தூரி வேண்டும். பார்த்துச் சேர்த்துக் கொள்.

கஸ்தூரிப்பிள்ளை—கஸ்தூரிச்சரக்கு

கஸ்தூரி - சாலவித்தை

வேணும்பார் தீக்கொளுத்தி வேகும் வீட்டில்
விருதான கஸ்தூரி வாயி லிட்டு
தோணும்பார் யாவருந்தான் தானே நின்றால்
தொளிலாளி இவனென்பார் சூட்சம் சூட்சம்
மாறும்பார் கஸ்தூரி வாயில் போட்டு
ஆறுக்குள் கடலுக்குள் அடங்கலாம் பார்
நாறும்பார் கஸ்தூரி மூலி வேரை
நாட்டுரேன் நன்றாக நாடிப் பாரே. 20

(பொ-ரை.) ஒரு சோதனை வேணுமென்றால் செய்துப் பார். தீக்கொளுத்தி எரிந்து வேகும் வீட்டினுள், மெருமை பெற்ற கஸ்தூரியை வாயில் அடக்கிக்கொண்டு செல். நீதான் தீயினால் தீங்கில்லாமல் உள்ளே நிற்பது, யாவரும் காணும்படித் தோன்றும. இந்த வித்தையை அனுபவித்துப் பார். உன்னைச் சிறந்த மாந்திரீகத் தொழிலாளி என்று எல்லோரும் சொல்லுவார்கள். எல்லாம் கஸ்தூரியின் சூட்சமம்தான்.

மற்றொரு சோதனையைச் செய்துப்பார். கஸ்தூரியை வாயில் அடக்கிக்கொண்டு ஆற்றுக்குள், கடலுக்குள் மூழ்கி இரு. நீண்ட நேரம் அடியில் இருக்கலாம். ஆள் தெரியாது, ஆனால் நீருக்கு வெளியே கஸ்தூரி நாற்றம் வீசும்.

கஸ்தூரி மூலிகை உண்டு. அதன் மூலிகை வேரைப் பற்றித் திட்டமாகக் கூறுகிறேன், நீ நன்ருக முயன்று அதன் சக்தியைப் பார்த்துக்கொள்.

கஸ்தூரிவேர் - வசியக்குளிகை

நாடுவார் கஸ்தூரி மூலி வேரை
நன்றாகக் காப்பிட்டு முடியில் சூட
சூடுவார் அப்போது சுரமு மில்லை
சூனியமு மண்டாது சூட்சம் சூட்சம்
தேடுவார் மிடமாது போகம் மீறிச்
சேருவா ருன்னையனு தினமு மப்பா
கூடுவார் மன்பாக மாகத் தானே
கொண்டுபா ளுள்ளுக்குக் குளுமை தானே. 21

(பொ-ரை.) அறிவுடையவர்கள் கஸ்தூரி மூலிவேரை நாடுவார்கள், அவ்வேரை நல்லமுறையில் பதனமாகக் காப்பிட்டு முடியில் சூட்டிக்கொள்ள, சூட்டிக்கொண்டவர் கட்கிருந்த சுரநோய் அப்பொழுதே தணிந்துவிடும். சூனியமும் நெருங்காது. இது மிகவும் சூட்சமமாகும்.

திடகாத்திரமுள்ள பெண்கள் போகம் அதிகரித்து உன்னைத் தேடுவார்கள். உன்னை நாள்தோறும் மன்மத விகாரத்துடன் உடல் சோரக் கூடுவார்கள். அன்பாக இணைந்திருப்பார்கள். கஸ்தூரி உள்ளுக்குக் குளுமையாக இருப்பதைப் பார்த்துக்கொள்.

கறும்பூனைக்கல் - குளிகை

குளுமையென்ன கறும்பூனைக் கல்லொன் றுண்டு
கூறுவா ருலகத்தில் கிடையா தப்பா
வளமையதி னுடையவிஞ்சைப் பூனை வாங்கி
வயித்தணைத்து சலந்தனிலே வதனம் பார்த்தால்
இளமையகாயமுகந் தெரியா திருந்த தென்றால்
இதுவிலிருக்கும் கல்லென்று யெனவே நீயும்
உளமையாய்க் காராவின் பால்தான் கேளு
ஒருபானைக் குள்ளிட்டுப் பூனையை முக்கே. 22

(பொ-ரை.) பலிங்குக் கல்லில் கருப்பூனைக்கல் ஒன்று உண்டு என்று சொல்லுவார்கள். அப்படி உலகத்தில் கிடையாது.

நல்ல பருவமுள்ள சுருசுருப்பான கறுப்பு நிறப் பூனையை வாங்கி வயிற்றோடு அணைத்துக்கொண்டு நீரில் உன் முகச் சாயலைப்பார். முகம் தெளிவாகத் தெரியா திருந்தால், உன் கையிலிருக்கும் பூனையில் குளிகைக்கல் இருக்கிறதென்று அறிந்துகொள்.

தேவையான அளவு காராம்பசுவின் பாலைக் கேட்டுப் பெற்று, ஒரு பானையில் ஊற்றிவைத்து, அப்பாலினுள் அக்கறும்பூனையை அமுக்கி அமுக்கி எடு.

கல்லெடுக்கும் உபாயம்

அமுக்கவே கல்லுவிழும் வாயி னாலே
முகமணியாய் தவக்கமிட்டு குளிகை யாக்கிச்
சிக்கவே மணியதனைப் பதனம் பண்ணி
திறமான முன்பிழைப்புக் கில்லை யென்றால்
திக்கெனவே மணிவாயி லடக்கும் போது
திருஷ்டியினால் பார்ப்பவர்க்கு கறும்பூனை
மிச்சுவே நிதியிருக்கும் வீட்டில் சென்று [யாவாய்
வேண்டியது தானெடுக்க மேவு மேவு. 23

(பொ-ரை) பாலினுள் பூனையை அமுக்கவே, அதன் வாயிலிருந்து ஒரு குளிகைக் கல் வெளியே விழும். அதனை எடுத்து முகப்புத் தெரியுமாறு தங்கக் கவசமிட்டு குளிகை போலாக்கிக் கொள். உனக்குக் கிடைத்த அம்மணியைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்.

திறமையுள்ள உனக்கு, நல்ல பிழைப்புக்கு வழியில்லை என்றால் சட்டென்று மணியை வாயில் அடக்கிக் கொள். வாயில் அடக்கிக்கொண்ட அளவில் கண்ணால் பார்ப்பவர் கட்குக் கறும்பூனையாகத் தெரிவாய். அந்த மாயவுருவுடன்

மிகவும் அதிகமாகச் செல்வம் சேர்ந்து இருக்கும் தனவான் வீட்டினுள் சென்று, உனக்கு வேண்டிய அளவு செல்வங்களை எடுத்துக்கொண்டு வருதற்கு உடனே துணிந்து செல்வாயாக.

கருநாய் மணி—வசியம்

கேளடா கருநாயின் வித்தை கேளு
கிறுடிக்கு போ துனிலே கருநாய் மண்டை
வேளடா அடிக்கையிலே கொதிக்கு மூளை
மேவியெடு உள்ளேயொரு மணிபோல் காணும்
பாளடா போகாது மணி யெடுத்து
பரிந்துமுயல், வேட்டைதனை ஆடிப்பாரு
கேளடா முயல்முழுதுங் கையில் சேரும்
கூறுவோ மனுபோகம் பண்ணும் போதே. 24

(பொ-ரை) கேளடா! கருநாய் மணியின் வித்தையைச் சொல்லுகிறேன் கேள்!

உக்கிரமாக வெய்யல் இருக்கும்பொழுது, சூரிய வெப்பம் தாக்கி அடிக்கையினாலே கருநாயின் மண்டையிலுள்ள மூளை கொதிப்படையும். மண்டையினுள்ளே ஒரு மணி போலக் காணும். முயற்சி செய்து எடுத்துக்கொள். அம்மணி வீணாகப் போய்விடாது. மணியைக் கையில் எடுத்துக்கொண்டு, விருப்பம்போல் முயற்சிசெய். முயல் வேட்டைதனை ஆடிப்பார். முயன்ற செயலனைத்தும் கை வசமாகும். அதனைப் பயன்படுத்தும் போது செய்ய வேண்டிய முறைகளைக் கூறுவோம்.

கருநாய் மணியின் மகிமை

போதையிலே மணியெடுத்து அரையில் கட்டு
புணர்ச்சியுனை மேவும் பின்னே ராகப்
பாதையிலு மிருட்டுவழி தன்னில் போனால்
பசாசேது பேயேது பய மேதப்பா

கோலதையர்கள் மோகமடா கொள்ளை கொள்ளை
குருடனுக்கும் தெரியாதோ மணியின் வேகம்
மோதிடவே "ஞாளிவடு காயதேவா
ஓம்"மெனவே மணிக்கிருநூ றுருவைச் சேவி. 25

(பொ-ரை) காம இச்சை உண்டானால், மணியை இடுப்பில் கட்டிக்கொள். புணர்ச்சி அதிகமுண்டாகும். பின்னர், சரியில்லாத பாதையிலும், இருட்டு வழியிலும் போனால், பிசாசு பயம் உண்டாகாது. பேய் பயம் கிட்டாது, பெண்களின் காம இச்சை மிகவும் அனுபவிப்பதாகும். கருநாய் மணியின் சக்தி குருடனுக்கும் தெரியும்.

மணிக்குச் சக்தி உண்டாக்க, " ஞாளி வடுகாய தேவா ஓம் " என்று மணியைக் கையில் வைத்துக் கொண்டு இரு நூறு உருவை செபித்துக்கொள். பலன் உண்டாகும்.

குரங்குமணிக் குளிகை

சேவிக்க ஒரு குரங்கு வித்தைக் கேளு
சினையாகும் பெண்குரங்கு பிடித்து வந்து
தவிக்கவே அதனுடைய மாவி னோக்கி
சந்ததி பெற்றெடுக்கையிலே நஞ்சி னோடே
கவிக்கமணி கொடியிடை யிருக்கும் பாரு
கண்கெட்ட குருடனுக்கும் தெரியும் பாரு
புவிக்குள்ளிது கிடையாது புரவிவேகம்
பூணவகை யினிக்கேளு பூமி மீதே. 26

(பொ-ரை) செயல்படுத்த, மற்றுமொரு குரங்குவித்தைச் சொல்லுகிறேன் கேள். சினையுள்ள பெண்குரங்கைப் பிடித்துவந்து வைத்துக்கொள். அது குட்டி ஈனும் பருவ காலம் வந்து அவஸ்தைப் படும்போது, சமயம் பார்த்து இரு. குட்டி வரும்போது. நஞ்சுக்சொடியுடன் சேர்ந்து அதனிடையே கவிக்கமணி இருக்கும் பார்த்து எடுத்துக்கொள்.

இம்மணியின் மகிமை கண்கெட்ட குருடனுக்கும் தெரியும். வெளியுலகத்தில் இந்த மணி கிடையாது. குதிரை வேகம் போன்று உலகில் அதனைச் செயல்படுத்தும் வகையினைச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

குரங்குமணிக் குளிகை

பூமியிலே மணிதனிலே தங்கம் சேர்த்துப்
புத்திரனுண் டாகவொரு பூசை செய்து
சாமியுட கிருபையினால் மங்கை மார்க்கு
தனிகுளிசம் பூண்டிடவே மண்டலத்தில்
நே(மி)முகம தாகுமடா மலடோ யில்லை
நேரிழையாள் பெத்தபிள்ளை வயதே வந்து
காமியா யிருக்குமந்தக் குளவி தானும்
கன்னியிட குளிகைதனை கழட்டு வாயே. 27

(பொ-ரை) மணியைத் தங்கக் கவசமிட்டு, பிள்ளைப் பேறு உண்டாக சிறந்த பூசை செய்து, சாமியினுடைய அருளினால் பிள்ளையில்லாத பெண்களுக்குத் தனியாகக் குளிசம் செய்து அணிவித்தாயானால் ஒரு மண்டலம் நாற்பத்தெட்டு நாளில் கருத்தரித்த முகப்பொலிவு தோன்றும். மலடு என்பது இல்லை. அவளுக்கு அணிவித்த குளிகையைக் கழட்டிவிடு. அவள் பெற்ற பிள்ளை வளர்ந்து பருவத்தில் காமியாக இருப்பான்.

மண்டலம்—48 நாள். மலடு—கருத்தரிக்காத இயல்பு.
காமி—காமம் மிகுந்தவன். குளவி—(குழவி) குழந்தை.

சந்ததி பெருக—மணிமந்திரம்

களத்திவிடு மண்டலந்தான் கிடந்தால் போதும்
மகிழ்ந்துதடா கன்னிகைதன் கிரக சாபம்
முளைத்துமே உன்னாலே அடுக்கடுக் கவொரு
மிக்க சந்ததிபெற் றுயர்வா ளப்பா

வளைத்துமே பெருகுமடா மைந்த ரெல்லாம்
மார்க்கண்டன் போலிருப்பார் மணியி னாலே
நிலத்திலே இன்னுமொரு மலடி யான
நேரிழைக்கு முன்பாகமணி மாத்தம் செய்யே. 28

(பொ-ரை) ஒரு மண்டலம் அவள் கழுத்தில் இருந்தால் போதும். மணியைக் கழட்டிவிடு. கன்னிகையின் புத்திர தோஷம் நீங்கியது. உனது குளிகையின் மகிமையால், அவளுக்குப் பிள்ளைகள் மேலும் தொடர்ந்து பெருகும். உயர்வடைவாள். அப்பிள்ளைகள் மார்க்கண்டனைப் போலச் சிரஞ்சீவியாக இருப்பார்கள். இது குரங்கு மணியின் அற்புதச் சக்தியாகும். உலகத்தில் இன்னமொரு மலடியான பெண்ணுக்கும் முன்போல் குளிசமணியை மாற்றி அணிவிப்பாய்.

சந்ததி—பல பிள்ளைகள் உண்டாதல். **களத்திவிடு**—கழட்டிவிடு. **மாத்தம் செய்**—மாற்றி அணிவிப்பாய்.

திசைக்கட்டு வித்தைக்கு மந்திரம்

நிமிர்த்திச்செய்யக் கண்கட்டும் மந்திரம் கேளு
நீலிகட்டு பிடாரிகட்டு நீதான் கட்டு
அமுக்கியெறி விளையாடுந் தேவி யடி
தொடுத்து முடிவரைக்கும் திசைக்கட்டு கட்டு
"அமாம் பங் வங்" கென்று சேவி(யப்பா)
அனைவோரும் வசமாச்சு கண்கட்டாச்சு
குமிக்குமே வித்தையெல்லாம் குறளி சென்று
கூத்தாடு மாந்தரீகம் குருவ லாமே. 29

(பொ-ரை) துணிந்து உயர்ந்த வித்தைகளைச் செய்யக் கற்றுக்கொள். கண்கட்டும் மந்திரம் கேள். நீலி கட்டு பிடாரிகட்டு மந்திர உச்சாடனம் செய்து கை விரல்களை மடக்கிப் பிடித்து அமுக்கி உதறி எறிவாய். தேவி விளையாடுவாள். அடிதொடுத்து முடிவரைக்கும் திசையைக் கட்டு, கட்டு. அதற்கு மந்திரம்-"அமாம் பங் வங்" என்று

செபிப்பாய். அனைவரையும் வசமாக்கிக் கண்கட்டலாச்சு. இந்த வித்தைக்குரிய தேவதை குறளி சென்று கூத்தாடும் வித்தையெல்லாம் மந்திரம் தரும். தொடங்கிச்செய்.

குறளி—கண்கட்டு வித்தைக்குரிய தேவதை.

சபையைக் கண்கட்ட மந்திரம்

கூறுவுக்காய் சபைக்கட்டு மாந்தி ரீகம்
கூறுவோம் அரசனொடு சபையோர் கட்டு
திருகுமிக வாராது குருத்தேவி தேவி
சிங் அங் மங் கென்றே சிறீ மென்று
மருவுக்காய் லட்சமுருச் செவிக்கும் போது
மனுசர்சபை அரசர்சபை வானோர் கூட்டம்
நிருபனே கட்டாச்சு இந்த விஞ்சை
நீக்கார்கள் ராதாக்கள் நிலவுதாமே. 30

(பொ-ரை) கூட்டமாக இருக்கும் மக்கள் சபையைக் கட்ட மாந்திரீகம் கூறுகின்றேன்.

அரசனோடு அவனது சபையோரையும் கட்டு. குற்றங் குறைகள் வராது.

"குருத்தேவி தேவி சிங் அங் மங் சிறீம்" என்று தொடர்ந்து லட்சம் உரு செபிக்கும்போது, மக்கள் சபை அரசர் சபை, தேவர் கூட்டம் எல்லாம் மாந்திரீகனே கட்டி விட்டாய். இந்த வித்தைத்னை பிரபுக்கள் நீக்கார்கள். அவர்களிடத்தில் உனக்குத் தொடர்புதரும் வித்தை இதுவாகும்,

திருகு—குற்றம்.

கூகை நீறு - சபையைக் கட்டும் வித்தை

நிலவாக சபையடங்கு மரசர் நாவு
நெடுகலுமே யடங்கிவிடும் மண்கூகை நீறு
மனவாக விதிப்படியே சபையில் பூசி
மந்திரமு மிதுதான்டா மனுடற் கெல்லாம்

தினமாறு பூத்தயவான் பேர்க்கு (முதறித்)
தெரிக்கும் பேர்க்குமிது செய்து பாரு
கனவாக நினையாதே கூகை நீறு
கண்டவர்கள் பேசாமல் நா வடங்கும். 31

(பொ-ரை.) மண்கூகை நீற்றினை, யான் சொன்ன விதிப்படி மனத்தில் செபித்து பூசிக்கொண்டு சபையில் வருவாய். மந்திரமும் இதுதான். மனிதரானவர்க்கெல் லாம் நாளும் மாற்றம் செய்ய, கூட்டமாகக் கூடியிருக்கும் பேர்க்கும், உன் வார்த்தையை மீறி நடக்கும் பேர்க்கும் இந்தச் செயலைச் செய்துபார். அமைதியாகச் சபையோர் அடங்குவர். அரசர் முதலான பேர்கள் எப்பொழுதும் நாவடங்கி பணிவர். கனவாக நினையாதே. கூகை நீறு பூசினால் உன்னைக் கண்டவர்கள் நாவடங்கிப் பேசாமல் பணிந்து விடுவார்கள்.

மண் கூகை—புதரினுள் தரையில் கூடுகட்டி வாழும் கூகை.
நீறு—பறவை படுத்திருந்த இடத்தில் எடுத்த மண் புழுதி.

மிருகம் வாய்க்கட்டும் மந்திரம்

அடங்கவே மிருகமெல்லாம் வாய்கள் கட்ட
"அம் அம் ஐ ஐ" யென்றறையி னுள்ளே
தொடங்கவே கறடிவாய் கட்டு மப்பா
சூதான புலிவாய்க் கட்டக் கேளு
இடங்கவே "அரி அரி நாவடங் நறீறீ" யென்று
சொல்லப் புலிவாய் கட்டிப் போச்சு
துடங்கவே கடுவாய்க்குஞ் சூ சூ வென்று
சொல்லுவாய் றீங்காரம் அரியென் றோதே. 32

(பொ-ரை.) காட்டு மிருகங்களை வாய்கட்ட மந்திரம் அம், அம், ஐ, ஐ என்று வாயினுள்ளே உச்சரிப்பாய். தொடங்கிய அளவில் கறடி வாய் கட்டும்.

புலியின் வாய்கட்ட மந்திரம் கேள். புலியைக் கண்ட வுடன் அழுத்தமாகத் தொடங்கி, "அரி அரி நாவடங் நறீறீ"

என்று உச்சாடனம் செய். வஞ்சகமான புலியின் வாய் கட்டிப்போகும். உனக்கு அடங்கிவிடும். சிறுத்தைப் புலிக்கும், கழுதைப் புலிக்கும் சூ சூ என்று தொடங்கி மந்திரத்தை உச்சரிப்பாய். அடங்கிப்போகும். மூல மந்திரம் ரீங்காரம் அரி என்பதாகும். ஓதிப்பார்.

கட்டு—மந்திரத்தால் கட்டுண்டு, செயலற்று அடங்கும் செயல்.

பிராணிகள் வசியமாக மந்திரம்

ஓதவே, மான்மரைகள் கலைகள் புல்வாய்
உன்பிறகே தொடரவே உம் வா வென்ன
பூதவே ஐங் ரீ யென்று செவிப்போன்
அவர்போலக் கைகாட்ட வருமே பாரு
ஏதவே கறுமுதலைத் தடந்தா னப்பா
இதன்வேரைக் குளிசமிட் டிருக்க வேணும்
கோதவே மான்மரைகள் கலைகள் புல்வாய்
கூப்பிட்டா னென்றுபின் வருகும் பாரே. 33

(பொ-ரை.) மான் இனங்களாகிய மரை, கலை புல்வாய் ஆகியவை உன்னைப் பின் தொடர்ந்து வசமாகி வர மந்திரம். 'உம் வா பூதவே ஐங் ரீங்' என்று செபித்துக் கையால் அழைக்க அவை உன் பின்னால் வரும் பார்.

இன்னொருமுறை, கறுமுதலைத்தட மூலிகைவேரை (முதலைப் பூண்டு) அதன்வேரைக் குளிசமிட்டு வைத்திருக்க வேண்டும். அதனைக் காட்டிய அளவில், மான் மரைகள் ஆகிய மானினங்கள் கூப்பிட்டானென்று அருகில் வரும் பார்.

மரை—காட்டெருமை.

வசிய திலகம்

செய்துபார் முற்தபச்சி வேரை யானால்
தின்னவென்று கையிலே பிடுங்கி வந்து
வைத்துப்பா ரதைக்கருக்கி மையாய்ச் சேர்த்து
வளரண்ட யெண்ணெயிலே திலகந் தீட்டு

பெய்துபா ருலகமெல்லாம் வசமாச் சப்பா
 பெண்களெல்லாம் கைய்வசமாம் பிறகு பாரு
கொய்துதான் தலையைவெட்டி போட வென்ற
 கோபமுன் போந்தனையும் கும்பிட் டானோ. 34

(பொ-ரை.) செய்துபார். முற்கறட்டை என்னும் பச்சிலை வேரை சமையல் செய்து தின்னவென்று சொல்லி செடியைக் கையிலே பிடுங்கிவந்து,

அதைக் கருக்கி மையாகச் சேர்த்து, அண்ட எண்ணெ யிட்டுக் குழைத்துக்கொண்டு அதனை,

நெற்றியில் திலகமாக வைத்துப்பார்! உலகமெல்லாம் வசமாகும். பெண்கள் கைவசமாவர். மேலும் சோதித்துப் பார்.

உன் தலையை வெட்டி எடுத்துப்போட வந்த பகைவன், கோபம் அடங்கி, நீ போகும்தனையும் உன்னைக் கும்பிட்டு நிற்பான்.

அண்ட எண்ணெய்—முட்டைத்தைலம், முசுடு முட்டைத்தைலம்.

படை ஓடக் கட்டு மந்திரம்

தளமதனை னோக்கிச் செப்பக் கேளு
 ரணத்திலே வாறாமல் ஓடிப் போவான்
ரகசியமோ பாரப்பா "ராமா ராமா
 குதை தி யிம் இரி அம் அரி" யென்று
கூறடா படைநோக்கிக் கொண்டு லட்சம்
 பணத்திலே உறையாண்டா, நாவெழும் பான்
பாரடா படைகுலைந்து ஓடும் பாரு
 பாராசன் ஓடியூர் புகுவான் பாரே. 35

(பொ-ரை.) படையெடுத்து வந்த சேனைகள் தங்கியுள்ள இடத்தை நோக்கிச் சொல்லும் வசியங்கட்டு மந்திரம் கேள்.

சண்டைபோட வராமல் திரும்பி ஓடிப்போவான்.

அதற்கு மந்திரம் ரகசியமாக இல்லை. பார்த்துக் கொள். "ராமா ராமா குதை தி இம் இரி அம் அரி" என்பதுதான்.

லட்சம் உரு செபித்து உருவேற்றி, படையை நோக்கி உச்சாடனமாகக் கூறு.

பகையரசன் செல்வச் செருக்கால் தங்கமாட்டான். வீரமாகப் பேசமாட்டான். படை நிலைகுலைந்து திரும்பி ஓடும். பகையரசன் திரும்பி ஓடி தன்னூரில் புகுந்து கொள்வான். இந்த வித்தையின் மகிமையைப்பார்.

பரராசன்—பிறநாட்டு அரசன்.

போர்க்கள வசியச் சூண்ணம்

வான்பார்த்த குருவிதனைச் சுட்டு நீத்தி
மண்கூகை ஆந்தைநீர் மூன்றுங் கூட்டித்
தான்பார்த்த சமர்க்களத்தில் தூவிப் போடு
சத்திராதி நாவெழும்பான் சேனை யோடு
யான்பார்த்த வித்தையடா உலகத் தோர்க்கு
அரி அரி யென்றது நூறுஉருவை யோது
ஊன்பார்த்து உயிர்மறந்து நிற்பா ரப்பா
உள்ளபடி உனக்குரைத்தேன் மெள்ளக் காணே.

(பொ-ரை.) வான் பார்த்த குருவியை சுட்டு நீறாகச் செய்துகொள். மண்கூகைமண், ஆந்தை எச்சநீர், இவை மூன்றையும் சேர்த்து, நீ பார்த்த போர்க்களத்தில் தூவிப் போடு. கொடிய பகையரசன் வீரம் பேசமாட்டான். சேனையோடு போர் செய்ய வரமாட்டான். யான் நேரில் செய்து பார்த்த வித்தை.

அரி அரி யென்று நூறு உரு ஓது. பகைவர் தன்னையே பார்த்துக்கொண்டு, உயிர் மறந்து கல்போல் நிற்பார்கள்.

உள்ளபடி உனக்கு இந்த வித்தையைச் சொன்னேன். மெள்ளக் கண்டுகொள்.

நீத்தி—சாம்பலாகச் செய்து. ஊன்பார்த்து—மெய்மறந்து. உலத்தோர்க்கு யான் பார்த்த வித்தையடா.

அரையாப்புக்கு - மருந்து

தானென்ற அரையாப்பு வந்த தானால்
சமூலமா கவுதும்பை பிடிங்கி வந்து
தானென்ற சூட்சமடா லாட மூலி
நாவினால் உரையாதே அரைத்துப் பூசி
வானென்ற இடிவிழுந்த குழிபோல் புண்ணும்
வருத்துமடா அரையாப்பு புரைக ளெல்லாம்
தானென்ற ஊமத்தங் காயைச் சுட்டு
கனமான கடுக்காயின் பொடியைச் சுட்டுப்
போடே. 37

(பொ-ரை.) நாளுக்கு நாள் வருத்துகின்ற அரையாப் புக் கட்டி வந்ததானால், இடி விழுந்த குழிபோல் இருந்த புண்ணும் வருத்தும். அதற்கு மருந்து தும்பைச் செடி வாடமூலி இவற்றைப் பெயர் சொல்லாமல் அரைத்துப் பூசினால் குணமாகும்.

ஊமத்தங்காய், கடுக்காய் இவற்றைச் சுட்டுப் பொடித்து வைத்துக்கொள்.

இதுவும் அது

சுட்டுயிந்த மருந்துடனே வெல்லங் கூட்டி
சுகமான கோழிமுட்டை கருவா லாட்டி
கட்டாக மூன்றுநாள் பூசும் போது
கருக்கரைந்து வத்துமரை யாப்புத் தானே

சிட்டர்புகழ் ராஜவைத்தியம் தானா கும்மே
தேசத்தில் இம்மூலி செம்பொன் னாகும்
அட்டமருங் குழலாளே சொன்ன வித்தை
அனுபவிக்க அன்புடனே வழுத்திட் டேனே. 38

(பொ-ரை.) பொடித்துச் சுட்டுச் சேர்த்தவற்றுடன் வெல்லத்தைக் கூட்டி நல்ல கோழிமுட்டைக் கருவைச் சேர்த்துக் குழைத்து தொடர்ந்து மூன்றுநாள் புண்மேல் பூசினால் அடிக்கனம் கரைந்து புண்ணும் வற்றிக் காய்ந்து விடும்.

ஞானிகள் புகழும் ராஜவைத்தியம், தேசத்தில் இந்த மூலிகை மருந்து பொன்போன்றதாகும். பராசக்தி சொன்ன வித்தை. உலகத்தோர் அனுபவிக்கச் சொன்னேன்.

மன்மத வசிய திலகம்

விட்டுஇவர் மன்மத வசியஞ் சொல்வேன்
வெள்ளெருக்கு மூலம்விஷ்ணு காந்தி வேரு
கோஷ்டமுடன் செங்கழனி அகில்செஞ் சாந்து
கோரோசனை குங்குமப்பூ பூரமெட்டு
மிளநீராலாட்டி
சட்டமுடன் கயிறாக உருட்டிக் கொண்டு
சேவி மோகினிமந் திரத்தை ஓதி
வட்டமட புருவநடு திலகந் தீட்ட
மயங்குவார் லோகமெல்லாம் மயங்கும் பாரே. 39

(பொ-ரை.) அதனைவிட்டு, மன்மதவசியம் சொல்லுகிறேன். வெள்ளெருக்கு வேர், விஷ்ணுகாந்திச்செடி வேர், கோஷ்டம், செங்கழுநீர்ப்பூ, அகில்கட்டை, செஞ்சாந்து கோரோசனை, குங்குமப்பூ இவற்றோடு பச்சைக் கற்பூரத்தையும் சேர்த்து இளநீர்விட்டு அரைத்து, முறையாக அச்சாந்தினைக் கயிறாக உருட்டிக்கொண்டு, யோகினி

மந்திரத்தை ஓதி புருவ நடுவில் திலகமாக வைத்துச்செல்ல கண்டவர்கள் மயங்குவார்கள். உலகமெல்லாம் மயங்கும் பார்,

நஞ்சுண்ட சித்தர் காட்டிய வித்தை

நவிலவே யின்னமொரு வித்தை கேளு
நஞ்சுண்டா ரெனக்குரைத்தார் நல்ல வித்தை
நவிலுவேன் சாகாத மூலி வேரைச்
சந்திரனில் காப்பிட்டு உறவியில் வாங்கி
நிவிலுவேன் குளிசமது சென்னி மீது
நெகிட்த்திடவே யிதுவயனம் விபரங் கேளு
கவிலுவேன் கைக்குளொரு ஆனெடுக்க லாகும்
கண்டத்தில் தோளிரண்டானச் சென்னி மீதே. 40

(பொ-ரை.) சொல்லவே, இன்னமொரு வித்தைகேள். எனக்கு நஞ்சுண்ட சித்தர் கூறினார். நல்ல வித்தை உனக்குக் கூறுகின்றேன். சாகாத மூலிவேரைப் பௌர்ணமியில் காப்புக்கட்டி, அமாவாசையில் பிடுங்கி வைத்துக் கொள், மேலும் சொல்லுகிறேன்.

வேரைக் குளிசமாக்கித் தலை உச்சியில் நெகிழ்ந்திடவே இது வழிமுறை விபரம் கேள். நிகழ்த்தும் மாயாஜாலம் குறிப்பாகக் காட்டுகிறேன். கைக்குள் கண்டத்துடன் தோளளவு தெரியும்படியாக ஒரு ஆளினை உச்சியைப் பிடித்துத் தூக்கி எடுத்துக் காட்டலாகும்.

கவிலுவேன்—குறிப்பாகத் தெரியக்காட்டுவேன்.
வயனம்—செயல்விபரம். செய்முறை.

ஆயுத வித்தை

சென்னியின் மேலொரு நாளுமாக வஞ்சு
சென்மமெடுத்தே நடந்து திரியலாம் பார்
கன்னியிலே யீசான மாக மூலை
கருவிநாட்டில் அதுமேலே குதிக்க லாகும்

மின்னியிலே யானதவறி விழுகா தப்பா
விழுந்தா லும் கருவிபட்டுச் சாகான் பாரு
பொன்னியல்லோ யித்தனையுஞ் செய்செய் யென்று
பூந்துபார் பேராசை போடு போடே. 41

(பொ-ரை.) அஞ்சனத்தைத் தலை உச்சியின்மேல் ஒரு நாள் வைத்திரு. புதிய சென்மம் எடுத்ததைப்போல் உலகில் நடந்து திரியலாம். கன்னி மூலையில் ஈசான திக்கில் கூரிய வேலை நாட்டிவைத்தால், அதன்மேல் நீ குதிக்கலாம். சிறிதளவுகூடத் தவறாக விழுகாதப்பா. விழுந்தா லும் கருவிபட்டுச் சாகான் பார்.

சக்தியல்லவோ செய் செய் என்று ஊக்கம் தருகின் றாள். வித்தையை துணிந்து புகுந்து செய்து பார். பேராசை வரும். மேன்மேலும் செய்.

அஞ்சு சென்மம்—பல ஜென்மம். கருவி—வேல், கூரிய வாள். பொன்னி -சத்தி. பூந்துபார்—செயலில் புகுந்து செய்துபார்.

பாய்படக்க மூலிகைவேர்

போடவே யின்னமொரு வித்தை கேளு
பூதலத்தில் கலப்பைவேர் பிடுங்கத் தேடி
வாடவே வேண்டாங்காண் ணீயு மப்பா
அண்டரோ தயனைப்பாம் பணுகும் போது
நீடவே சென்னியிலே குளிச மிட்டு
நிறுத்தவே யிதன்விபரம் நினைவாய்க் கேளு
சாடவே பிலமுண்டாம் மூலி வேரால்
சண்டமாருதம் போலே தாக்க லாமே. 42

(பொ-ரை.) இன்னமொரு வித்தை கேள். உலகத்தில் கலப்பை வேர் பிடுங்கத் தேடி அலையவேண்டாம். சூரியனை ராகு அணுகும் கிரகண காலத்தின்போது வசிய மாக உரு போடு. நிலைப்பாகத் தலையிலே குளிசமிட்டுக் கொண்டு, எதனையும் நிறுத்திக்காட்ட. இதற்குரிய விபரம் சொல்லுகிறேன். நினைவாகக் கேள்.

பாம்புகளைக் கொல்லும் பலமுண்டாகும். மூலிகை வேரால் சண்டமாருதக்காற்றுப்போல் சுழன்று தாக்கலாம்.

அண்டரோதயன் — உலகத்திற்குத் தோன்றுபவன் சூரியன்.
நிறுத்த—மந்திர வசியக்கட்டு செய்து நிறுத்த.
சண்டமாருதம்—சுழற்காற்று.
சாடவே பலமுண்டாம்—பகைவனோடு போரிட்டு வெல்லுதற்குரிய பலம் உண்டாகும்.

அனுசவேர் - மகிமை

தாக்கவே கலக்கடிக்க மூல மோது
 தலையினிலே கருவிவெட்ட வெட்டறாது
நோக்கவே குறுந்தடியால் நொடிக்கும் முன்னே
 நுனிக்குளிச மிறுந்திடத்தில் அடிக்கும் போது
பார்க்கவே சுள்ளிசுள்ளி யாகப் போகும்
 பருந்தேங்காய் விரலையிட உடையும் பாரு
ஆக்கினசோ றெந்தமட்டோ திங்கலாம் பார்
 அறுசுவையே தேவையில்லை அனுச வேரே. 43

(பொ-ரை.) பகைவரைத் தாக்குவதற்கும், நிலை குலையச் செய்வதற்கும் மூல மந்திரத்தைச் சொல். உன் தலையிலே வாளால் வெட்டினால், வெட்டுக்காயம் உண்டாகாது. குறுந்தடியால் உன்னை அடிப்பதற்கு முன்னே, நீ பார்த்த அளவில் அத் தடி தூள் தூளாக உடைந்துபோகும்.

தேங்காயை ஒரு விரலால் தொட உடைந்து விடும் பார். எந்த அளவு சோறு ஆக்கி வைத்தாலும் சளைக்காமல் தின்னலாம். நாக்குக்குச் சுவை தேவையில்லை. சோறே சுவைக்கும். அனுசவேரின் வித்தை இதுவாகும்.

அனுசவேர்-எடுக்கும் காலம், பலன்

அனுசவேர் அனுசத்தில் காப்புக் கட்டி
 யந்தியிலே சந்திரனைத் தீண்டும் போது
மனுசமா வேர்பிடுங்கிச் சிரசில் கட்ட
 மாத்தானை வெல்லுமடா புலிவாய் கட்டும்

தனுசாஸ்திர பிலவானாய் உலகுக் கெல்லாந்
தானவனா யிருப்பாய் சந்தேக மில்லை
கனிச்சபேர் உண்டாகுங் கன்னி மாரும்
கலைசோர்ந்து உனைத்தேடித் தொடருவாரே.

(பொ-ரை.) அனுசம் வேரை அனுச நட்சத்திரத்தில் காப்புக்கட்டி, அந்திவேளையில் சந்திரனை ராகு தீண்டும் சந்திர கிரகணத்தில், செடிக்குத் தீபதூபங்காட்டிப் பக்குவமாக அந்த வேரைப் பிடுங்கி சிரசில் கட்டிக்கொள். அதன் சக்தியால்,

பகைவனை வெல்லும், புலி வாயைக் கட்டும், வில் வித்தையில் பலம் பொருந்தியனவாய், உலகத்தோருக் கெல்லாம் தேவனாக இருப்பாய். இதில் சந்தேகம் இல்லை. பலவிதமான பெயரும் நட்பும் உண்டாகும். மங்கையரும் மோகத்தால் ஆடைகள் நெகிழ, உன்னைத்தேடி பின் தொடருவார்கள்.

அனுசவேர்—அனுசவேரின் சித்து. **மனுசம்**—பக்குவம். **சிரசு**—தலை. **மாத்ரான்**—பகைவன். **தனு**—வில். **பிலவான்**—பலவான். **கனிச்சபேர்**—அனேகம்பேர், அனேக நற்பெயர். **கலை**—இடுப்பு ஆடை.

துடரிவேர் வகையும், பயனும்

துடரியிலே ஆறுவகைத் துடரி யுண்டு
சுரூபமெல்லாம் ஒன்றுபோ லாகும் மூலி
பட்டரையிலே பரணிமுத லாறுக் குள்ளாம்
பால்பொங்கும் பருவத்தில் வேரை வாங்கி
அடரயிலே பரணிவே ரடறொட் டாது
ஆறுகளை காத்திகைவே (ரட) ரொட்டாது
துடரியிலே பிடித்திழுக்குந் ரோகணி வேர்
துஷ்டமிரு கமழைக்கும் மிருக சீரிடவேர். 45

(பொ-ரை) நட்சத்திரப் பெயரமைந்த மூலிகைகளிலே ஆறுவகை உண்டு. அவற்றின் அடையாளமெல்லாம் ஒன்றே

போல் இருக்கும். இவை படரும் மூலிகை. வரிசையில், பரணி முதலாக, கார்த்திகை, ரோகணி, மிருக சீரிடம், திருவாதிரை, புனர்பூசம் என்னும் ஆறு பிரிவாக இம் மூலிகைப் பெயர்கள் அமையும்.

சூரிய உதயத்தில் பரணிவேர் பிடுங்கி, அதைச் சேர்த்து எடுக்கும்போது அதன் தூரு ஒன்றோடொன்று ஒட்டாது. ஆறு பிரிவாகவுள்ள கார்த்திகைவேர் அடக்கிப் பிடிக்க வராது. தொரட்டிப்போலத் தொட்டவுடன் பிடித்திழுக்கும் ரோகணிவேர். மிருகசீரிடவேர் மிருகங்களை அழைக்கும்.

*தந்திரப் பெயர்களாக மூலிகைகளின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

துடரி—நட்சத்திரத் தொடர்புடைய மூலம்.

ஆதிரை, புனர்பூச மகிமை

சீருடனே ஆதிரைவேர் கொழுநன் மாரை
சேர்க்கைபண்ணும் வாழாப் பெண் புருடற் காகும்
போரிடவே புனற்பூச வேரை வீட்டில்
புதைத்திடவே கலகமுண்டாம் பூண்டு பாரு
ஆருடனே சொன்னாலுந் துஷ்ட ருக்கு
அனுவளவு செய்தாலும் பாவம் சேரும்
பாரினிலே சித்துக்கு மூலி கண்டாய்
பார்த்துமே சத்தியமாய் நடந்து கொள்நீ. 46

(பொ-ரை) திருவாதிரைவேர், பிரிந்திருந்த கணவனோடு மனைவியைச் சேர்த்துச் சிறப்பாக வாழவைக்கும். கணவனொடு வாழாமல் பிரிந்திருந்த பெண்ணைச் சேர்த்து வாழவைக்கும்.

உனது விரோதிகளுக்குள் ஒற்றுமையில்லாமல் சண்டை உண்டாக, புனர்பூச வேரை, அவர்கள் வீட்டில் புதைத்து விட்டால் அவர்களுக்குள் விரோதம் உண்டாகிக் கலகம் ஏற்படும்,

இச்செயலைச் செய்து பார்!

யார் எந்த முறையில் எவ்வளவு சொன்னாலும் துஷ்டரின் விருப்பத்திற்காகப் பிறருக்கு அணுவளவு நீ செய்வினை செய்தாலும், அந்தப் பாவம் உன்னையே சேரும்.

உலகத்தில் சித்துவித்தைக்கு மூலிகைகளை அறிந்து கொண்டாய். அவற்றைப் பார்த்துச் சத்தியமான முறையில் நீ நடந்துகொள். நன்மை தரும்.

குருவசனம்

சீரான சித்துவித்தை எல்லாம் சொன்னேன்
சிறுமதியால் விளையாட்டாய் செய்தி டாதே
தேராத செய்வினைகள் உன்னைச் சாடும்
செய்தவினை நரகத்தில் சேர்க்கும் பாவம்
தீராத கொடுநோய்கள் உன்னைச் சேரும்
தெருவிலே நாய்ச்சோறு தின்பாய் பாரு
மாறாது சாபமிது குருவின் வார்த்தை
மறவாமல் சித்திக்கப் புகழ தாமே. 47

(பொ-ரை) சிறப்பான சித்துவித்தைகள் செய்யும் உபாயங்கள் எல்லாவற்றையும் உனக்குச் சொன்னேன்.

அற்ப புத்தியால் விளையாட்டாக மனிதருக்குச்செய்து விடாதே. மாந்திரீகம் சித்தி பெறாத நிலையில் நீ

பிறருக்குச் செய்த செய்வினைகள், உன்னையே தாக்கிக் கெடுக்கும்.

வேர், குளிசம், கற்பம், திலகம், பாவை-மந்திரம் ஆகிய வற்றால் நீ தவறாகச் செய்த செய்வினையின் பாவம், உன்னை நரகத்தில் சேர்க்கும்.

தீராத கொடிய நோய்களெல்லாம் உன்னையே வந்து சேரும்.

நிலைகெட்டுத் தெருவிலே நாய்த் தின்னும் எச்சிலைச் சோற்றைத் தின்பாய்.

குருவின் சாபவார்த்தை இது. மாறவே மாறாது. இதை நினைவில் வைத்துக் கொண்டு சித்தித்து இருக்க, உலகம் உன்னைப் புகழ்வதற்கு ஆகும்.

நூல்தரும், வழக்குச் சொல்-
தெளிவும் உரையும்.

அகம்	—ஞானம்
அகலம்	—பெருமை
அங்கிசம்	—சேர்க்கை
அசத்து	—மாயை
அசனி	—இடி
அஞ்சனம்	—கண்ணுக்கிடும் மை
அடக்கல்	—மறைத்தல்
அடங்கலாம்	—அடங்கியிருக்கலாம்
அடுக்களை	—சமையலறை
அடைக்காய்	—அடைத்து நிறுத்தாதே!
அண்ட எண்ணெய்	—கரு எண்ணெய் (முட்டை)
அத்தி	—பேய் அத்தி
அப்பாலே போ	—இடத்தை விட்டுப்போவாய்
அரிசியிடை	—அரிசி அளவு எடை
அரியநடம்	—காணற்கரிய நடனம்
அரை	—இடைக்கவுள்
அரையாப்பு	—இடைக்கவுள்களில் எழும் கட்டி (பெண்நோய்)
அவையடக்கம்	—ஐம்புல அடக்கம். மனவடக்கம்
அழுங்கலாய்	—நிதானமாக
அறை	—சொல்லுவாய் (அறைதல்)
அன்னம்	—சோறு
அனுதினம்	—நாளும்
அனுபோகம்	—செயலறிவு
ஆச்சு	—ஆயிற்று
ஆசுரேன்	—ஆசையோடு சொல்லுகிறேன்
ஆவி	—உயிர். உயிர்ப்பு

ஆள்நாடா	—மனிதர் நெருங்காத
இடங்க	—தொடர்ச்சிபெற
உதித்திடு தண்ணீர்	—சுரக்கும்நீர், சுனைத்தண்ணீர்
உபாயமாய்	—தந்திரமாக
உரு	—மந்திரச் சொற்களைத் தொடர்ந்து உச்சரித்தல்
உருமேகம்	—தேகத்தில் வரும் வெப்பப் படை நோய்
உரைத்தால்	—உச்சரித்துச் சொன்னால்
உள்சூடு	—வெட்டைச்சூடு. உடம்பினுள் எழும் சூட்டுநோய்
உளமையாய்	—உள்ளவாறாக
உறைத்திடும்	—தோய்ந்துவிடும்
உறையான்	—தங்கமாட்டான்
உன்பாரி	—உன்னிடத்தில்
ஊடுருவும்	—நடுவே சென்றுவிடும்
ஊரும்	—கசியும்
ஊன்பார்த்து	—உடலைப் பார்த்து
எட்டி	—எட்டிக்கொட்டை
ஓதடா	—உச்சரிப்பாய்
கஸ்தூரிப்பட்சி	—பறவை வகையிலொன்று
கஸ்தூரிப்பிள்ளை	—கஸ்தூரி சரக்கின் உற்பத்தி. மதம். மான்.
கஸ்தூரி மூலி	—கஸ்தூரி மணமுள்ள மூலிகை.
கஞ்சமலர்மூர்த்தி	—பிரமன்
கட்டு	—நினைத்தபடி நிகழ்வது. கட்டுப் படல்
கடப்பாரை	—வலிய இரும்பு
கடும்பாரம்	—பிறரால் தூக்கமுடியாத கனம்.
கடுவன்	—ஆண் சிறுத்தை, கழுதைப்புலி
கடுவாய்	—கழுதைப்புலி, ஓநாய்
கண்டம்	—கழுத்து
கதியெம்பார்	—நீயே கதி என்பார்கள்
கமலத்தோன்	—பிரமன், திருமால், கமலமுனி

கரு —மூலச்சரக்கு
கருக்குரு —துல்லியமான உரு. சூட்சமான மந்திரம்
கருக்குருவி —வலியன்குருவி. கருவாட்டுவாலி
கருதிப்பாரு —சிந்தித்துச் செய்துபார்
கருநாய் —குளிசக்கருவுள்ள நாய்
கருவான —மூலமான, தொடக்கமான
கருவி —வேல், வாள் முதலிய ஆயுதங்கள்.
கல்சிப்பி —கல்லாலான குடுவை. (சிமிழ்)
கலிப்பாவை —துணியில் எழுதிய உருவம்
கற்பம் —வீரியச்சுண்ணம். வசியநீறு.
கறும்பூனை —முழுதும் கறுப்பான பூனை
கன்னி —பருவப்பெண். பருவம் கெடாத பெண்
கனிச்சபேர் —பலவிதமான பெயர் (புகழ்)
காப்பாத்து —காப்பாற்று
காப்பிடுதல் —குறித்த காலத்தில் மந்திர உச்சாடனத்துடன் மூலிகைகட்கு மஞ்சள் கயிறு சார்த்திக் கட்டுதல்.
காமி —பெண் மோகம் மிகுந்தவன்
காறடா —காப்பற்றடா
கானல் —சூரிய வெப்பம் காந்துதல்
கிட்டுங்காலம் —கிடைக்கும் காலம்
கிரகசாரம் —கிரகங்களால் நேர்ந்த புத்திர தோஷம்
குமியும் —நிறைந்து சேரும்
குழல் —வாரிமுடித்த கூந்தல் (கொண்டை)
குளிசமாடி —குளிகையாகச் செய்து
குளுமை —குளிர்ச்சி
குறளி —வித்தைக்குரிய குறுந்தேவதை
கூசுரேன் —அச்சப்படுகிறேன்
கூடு —பறவைக்கூடு
கெம்பீரம் —பெருமிதம். வீறாப்பு
கைகண்டவித்தை —பலித்த வித்தை

கொடி	—கருவைச் சூழ்ந்திருக்கும் கொடி.
சொடிவேலி	—மூலிகை. ருத்திரமூலம்
கொப்பரை	—பெரிய வாயகன்ற பாத்திரம்
கோதியம்பாரம்	—குப்பல். பெருங்குவியல்.
கோதியாம்	—கண்முன்னே காணும், குவியல்.
கோதையர்	—பெண்கள்
சகலது	—பலவகைப்பட்டது
சங்காத்தி	—தொட்ட.சேர்க்கை. தொடர்ந்து நட்பு.
சட்டாகும்	—படிந்து உறையும்
சண்டமாருதம்	—வேகமான குளிர்க்காற்று
சனம்	—மக்கள், மனிதக்கூட்டம்
சத்திராதி	—கொடிய வஞ்சகன்
சம்பிறதாய்	—சம்பிரதாயம், முறைப்படியாக,
சர்ப்பம்	—நாகப்பாம்பு
சலம்	—தண்ணீர்
சன்னி	—சுரதோஷ நோய்
சாடவே	—நேருக்குநேர்செய்யவே. போரிடவே.
சாரும்	—உன்னைச்சேரும்
சாலவித்தை	—உள்ளதை மறைத்துக் காட்டும் வித்தை.
சிட்டர்	—ஞானிகள்
சிட்டற	—ஒருதுளி இல்லாமல்
சித்தி	—பலவிதம், கைவந்த செயல்
சிமிழ்	—மை அடக்கும் சிறு குடுவை.
சிலிகை	—மெய்ச்சிலிர்ப்பு
சிறுசாக	—சிறியதாக
சீருடன்	—பெருமையுடன்
சுரம்	—சுரநோய், வெப்புநோய்
சுருக்கு	—உள்ளே பதனம் செய்
சூட்சம்	—சூட்சமம். நுட்பம்
சூடு	—உடல் சூடு, மூலச்சூடு.
சூனியம்	—செய்வினை

செப்பக்கேளு	—சொல்லக்கேள்
செம்போத்து	—செம்போத்துப் பறவை
சென்றுஆடி	—சென்று திளைத்து
சென்னி	—தலை உச்சி
சேருவார்	—கூடுவார்கள்
சேவி	—செபிப்பாய், உச்சரிப்பாய்
சேவிக்க	—உச்சரிக்க (மந்திரம்)
சேணை	—நெருக்கமாகும், உறவுச்சுற்றம்
சொரூபம்	—வடிவ அடையாளம்
சோதி	—தெளிவு. தெளிவாகத் தெரிதல்.
ஞாளி	—நாய். வைரவன்
தரித்துப்போடு	—நூலில் கட்டிப்போடு
தவக்கம்	—தாமதம், தளர்ச்சி
தவிக்கவே	—குட்டிப்போட வருந்தவே
தளம்	—பரந்த இடம். பூமி
தனுசாத்திரம்	—வில்வித்தை நூல்
தாகம்	—தண்ணீர் வேட்கை. ஆசை
தாவவே	—பாசம் தொடரவே
தான்றிட்டால்	—கடந்துவிட்டால்
தானவன்	—தேவருள் வித்யாதரர்
திண்டுமுண்டு	—தடித்தனம், முட்டாள்தனம்.
தியானம்	—ஒருமனச் சிந்தனை
திருக்கு	—வஞ்சகம். மனமாற்றம்
திருகுமிகு	—குற்றங்குறைகள் மிகுதியாக வஞ்சகம்
திருட்டி	—கண்பார்வை
திரும்ப	—மீண்டும். மறுபடியும்
திருவுரு	—அழகிய உருவம். லெட்சுமி
தின்மைசெய்ய	—கொடுமை செய்ய
தீயகளை	—தீய நெறிகள். கொடுஞ்செயல்கள்.
தீவுகள்	—நாற்புறமும் கடல் சூழ்ந்த நிலங்கள்
துடங்கவே	—தொடங்கவே

துடரி	—ஒரு பெயர் மூலிகையில் பலவகை (இனம்)
துடரியிலே	—இனவகைத் தொடர்பிலே
தும்புரு	—தும்புரு வாத்தியத்தேவர்
தேவி	—மகாமாயை சக்தி
தொளிலாளி	—தொழிலாளி மாந்திரீகத் தொழில் கற்றவன்
தோணும்	—தோன்றும். பார்வைக்குத் தெரியும்
நடுக்கானகம்	—நடுக்காடு
நல்லாள்	—கற்புடையவள்
நாசிநடுவா	—மூக்கின் நடுவே
நாட்டுரேன்	—திட்டமாகச் சொல்லுகிறேன்
நாரதர்	—வீணை இசைத்தேவர்
நாறும்	—மணம்வீசும்
நிதி	—பெருஞ்செல்வம்
நிதிதோணும்	—புதையல் செல்வம் கண்ணுக்குப் புலப்படும்
நிதியம்	—பொன்திரள்
நிமிர்த்திசெய்ய	—மேலும் துணிந்து செய்ய
நிருபன்	—நேரில் காட்டுபவன்
நிலவாக	—தண்மையாக
நிவிலுவேன்	—நினைவாகச் சொல்லுவேன்
நிறுத்த	—போக்க. நிற்கும்படி செய்ய
நீடவே	—நீடிக்கவே
நீத்தி	—நீறாகச் செய்து. (சுண்ணம்)
நேரிழை	—அழகிய பெண்
பஞ்சதருவேர்	—எடுக்கக் குறையாது வழங்கும் சக்திவேர்
பண்டிருந்தபெரியோர்	—பண்டைய ஞானிகள்
பண்டுபார்	—முன்னதாகப் பார்
பண்ணிவை	—செய்துவைப்பாய்
பணிமாறி	—செயல்மாற்றி
பதிதோணும்	—நினைத்த இடம் தோன்றும்

பதியப்பார் —தொடர்ந்து பழக்கிப்பார்
பய்யவே —பைய்யவே, மெதுவாக
பரராசன் —வேறு நாட்டரசன். பகையரசன்
பரிகின்னம் —மாற்றுச் செயல்
பரீச்சை —சோதனை
பலிங்கு —பிரதிபலிக்கும் கல்
பாத்திரம் —உலோகப்பாத்திரம்
பாரடா —செயலில் செய்து பார்ப்பாயடா
பாரம் —மிகுந்த கனம்
பாரு —அனுபவத்தால் பார்ப்பாயாக
பாளடா —பாழடா. வீணாணதடா
பிரித்துக்கேளு —வேறொன்றைக்கேள்
பிழைப்பு —வயிற்றுப்பிழைப்பு
புத்திரன் —மகன். பிள்ளை
புரவிவேகம் —குதிரை வேகம்
புரை —நாளங்களில் உள்படர்ப்பு
புல்வாய் —கலைமான்
புவி —மண்ணுலகம்
புள்ளின்மூலம் —குருவி கூட்டில் வைத்திருந்தவேர்
பூசுரேன் —அடக்கமாகச் சொல்லுகிறேன்
பூட்டிவைத்தது —மறைத்து வைத்தது
பூட்டு —தொடர்ந்து மந்திரம் உச்சரிப்பாய்
பூட்டுரேன் —சேர்த்துச் சொல்லுகிறேன்
பூந்துபார் —புகுந்துபார். செய்துபார்
பூரம் —கற்பூரம் (பூரம்)
பூருதியாணிகர் —போன சென்ம பலனுடையவர்
பெருக்குமடா —மிகுதியாகுமடா
பேசிறேன் —உண்மையைக் கூறுகின்றேன்
பேணி —விரும்பி
பேதிக்கும் —மாற்றமடையும்
பேர் —நல்லபெயர்
போதை —பொழுது. நற்காலம்

மண்கூகைநீறு	—புதரிடையே தரையில் கூடுகட்டி இருக்கும் கூகைப்பறவை இருந்த இடப்புழுதி.
மண்டலம்	—48 நாள் கொண்ட காலம்
மணியாக்கி	—குளிகை மணிசெய்து
மணியிறுக்க	—மணியாகத்திரட்ட
மதலை	—பிறந்த குழந்தை
மதிசித்தி	—அறிவை மாற்றும் வசியம்
மய்யம்பார்	—சந்தர்ப்பம் பார்த்து
மரை	—காட்டெருமை
மலடு	—கருகூடாத நோய்
மழுங்கலாய்	—ஒரே சீராக
மனுடருரு	—மனித உருவம்
மனையாள்	—மனைவி
மாட்டிஓது	—சேர்த்து செபி
மாடன்	—வசிய தேவதை
மாத்தான்	—பகைவன். எதிரி
மாந்திரீகம்	—மந்திரச்சொல்
மாயப்போய்	—மறைத்துக் காட்டியபதனால்
மாயம்	—ஒன்று மற்றொன்றான வித்தை
மாறாட்டம்	—புத்தி தடுமாறச் செய்யும் தீமை
மானம்பாடி	—வானம்பாடிக் குருவி
மிக்கவே	—பெருகவே
மிடமாது	—திடகாத்திரமுள்ள பெண்
மிருகசாதி	—மிருக இனங்கள்
மின்னார்	—அழகிய பெண்கள்
முக்காலும்	—எப்பொழுதும்
முக்கு	—முழுகும்படி அழுத்து
முடியில்சூட	—தலைமுடியில் சூட்டிக்கொள்ள
முயல்	—முயற்சிசெய்
முறுகி	—முடுக்கி, இறுக்கி
முழிக்குமுன்னே	—கண்ணுக்கு முன்னே

முழுங்கலாம் —விழுங்கலாம்
முனைமதியம் —மூன்றாம் பிறைச்சந்திரன் (நிறைமதி)
மூலம் —மூலிகைவேர்
மெத்தநன்று —மிகவும் நன்று
மெய்த்திட்டு —உடம்பு சிலிர்த்து
மெல்லிநல்லார் —உடலழகுடைய மகளிர்
மேரு —உயர்ச்சி. மேரு மந்திரம்
மேவியெடு —சென்று பதனமாக எடு
மேவு —மேலும் முயற்சி செய்
மொய்ப்பார் —நெருங்கித்திரளாகச் சுற்றிக் கொள்
மொளிகள் —விழிகள்
மோகம் —காம மயக்கம்
மோகனம் —வசீகர மன மயக்கம்
மோதிட —தாக்கம் செய்ய
ரசம் —பாதரசம்
ருத்திரமூலம் —ருத்திரவேர்
ரூபம் —வடிவத்தோற்றம்
லாடமூலி —குதிரைக்குளம்பு
போகம் —அனுபவ விளைவு
வக்கனாத்தி —கொண்டைலாத்தி குருவி
வசமாக —வசியமாக, அடங்கிவர
வதனம் —நெற்றி
வயனம் —விபரம். விளக்கம்
வயித்தணைத்து —வயிற்றோடு அணைத்து
வருகும் —வரும்
வல்லூத்துக்குருவி —வல்லூத்துக்குருவி (வல்லூரு)
வளமை —செழிப்பு, சிறப்பு
வறட்சி —வறண்டு போதல்
வாங்கி —எடுத்துக்கொண்டு
வாலு —மதனீர்ச் சாந்து. இளமை
வான்பார்த்தகுருவி —வானம்பாடி
வானோர் —தேவர்கள்

விசையராகம் —புதிய பண்ணில் பாடல்
விஞ்ஞை —அதிசயவித்தை
விண்டாது —நீங்காது. மேலே போகாது
விதிசித்தி —விதியை மாற்றலாம்
விந்து —வீரிய சாரம்
விருதான —பெயர் உண்டான
விள்ளையிலே —எடுத்துச் சொல்லும்போது
வீறடா —மிகுந்ததடா
வெந்நீர் —சூடேறியநீர்
வெளியாய் —வெளிப்படையாய்
வெறுவாய் —எளிமையாக
வேகும்வீடு —தீப்பற்றி எரியும்வீடு
வேணும் —வேண்டும்
வேர் —மூலிகைவேர்
வேர்குளிசம் —வேர்குளிகை
வேனல் —சூரியவெப்பம்
வேனிலான் —மன்மதன்

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர் களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதி களும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

T. R. **இராமசாமி,** I. A. S.,
மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
10—9—85.